
GOKULAM

கோகுலம்

ஆகஸ்ட் 2005 ♦ ரூ.6/- ♦ 96 பக்கங்கள்

குழந்தைகளின் குதூகலம்!



பொன்விழா ஆண்டில் டிஸ்னிலேண்ட்!

புதிய சித்திரத் தொடர்கதை ஆரம்பம்!

MILKA

WONDER CAKE



அற்புதமான ஆறு சுவைகளில்

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்

உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-

வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்

இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



ஆகஸ்ட் 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...

இந்த ஆண்டு சிறுகதைப் போட்டியில் பங்கேற்றவர்களைப் பார்க்கும்போது ரொம்ப மகிழ்ச்சி யாக இருந்தது. சின்னச் சின்ன ஊர்களில் இருந்து நிறையப் புது வாசகர்கள் போட்டியில் கலந்து கொண்டார்கள். அவர்களின்



எழுத்தார்வம் நம்பிக்கை கொள்ளச் செய்கிறது.

உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஏதாவது ஒரு திறமை ஒளிந்து கொண்டிருக்கும். முதலில் அதைக் கண்டுபிடியுங்கள். அதைக் கண்டுபிடித்த பின் அந்தத் திறமையை வளர்த்துக் கொள்ள உங்கள் கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எந்த ஒரு செயலுக்கும் தயக்கம்தான் முதல் எதிரி. தயக்கத்தை தயக்கமின்றி தூக்கி எறிந்து விடுங்கள். உங்கள் முயற்சியை முறைப் படுத்திக் கொள்ளுங்கள். அத்துடன் புதுப்புது உத்தியை மேற கொண்டால் நீங்களும் சிறந்த படைப்பாளர் ஆகி விடுவீர்கள்.

இந்த ஆண்டும் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் நிறையப் பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பிரபல எழுத்தாளர்கள் சுரேஷ்-பாலா (சுபா) அவர்களுடன் கோகுலம் ஆசிரியரும் நடுவராக இருந்து பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுத்தார்கள்.

முதல்பரிசு:

புலி வருது... புலி வருது...
சுப.வித்யா, எட்டாம் வகுப்பு,
புதுக்காட்டாம்பூர், சிவகங்கை
மாவட்டம்

இரண்டாம் பரிசு:

திவ்யா குட்டியும் குருவித் தங்கச்சியும்
வெ.பவித்ரா, ஏழாம் வகுப்பு,
திருப்பத்தூர்

மூன்றாம் பரிசு:


கிறிஸ்துமஸ் தாத்தா!
சு.அபிராமி, ஐந்தாம் வகுப்பு,
காயக்காடு, புதுக்கோட்டை
மாவட்டம்

பரிசு பெறாத, பிரசுரிக்கக் கூடிய கதைகள் கோகுலத்தில் பிரசுரமாகும்.

பரிசு பெற்றவர்களுக்கும், கலந்து கொண்டவர்களுக்கும், இனிமேல் எழுதப் போகும் உங்களுக்கும் வாழ்த்துகள்!

அன்புடன்
தம்பிப்பயல்





''கண் மங்கலா தெரியுது.''

''கண் டாக்டரைப் பார்...''

''அவரைப் பார்த்தாலும் அப்படித்தான் தெரியுது!''

- எஸ். மோகன், சங்கரன்கோவில்



''நேற்று உங்க டீச்சர் வீட்டை கரெக்டா கண்டு பிடிச்சேன்னு சொன்னே. இன்னிக்கு வீடு எதுன்னு தெரியாம இவ்வளவு தடுமாறுகிறாயே ஏன்?''


''நேற்று எங்க டீச்சர் வீட்டு வாசல்ல ஒரு ஆள் நின்னுக்கிட்டிருந்தார். இன்னிக்கு அந்த ஆளைக் காணோம். அதான் குழப்பமா இருக்கு!''

அனுராதா ராஜப்பா, வத்தலக்குண்டு

''200 ரூபா இருக்கு. ஆளுக்கு 'பிஃப்டி பிஃப்டி' எடுத்துக்கலாம்!''

''அப்ப மீதி 100 ரூபாயை என்ன பண்றது?''

- பா.விஜயசாரதி, திருப்பதி




கன்னத்தில் கை வைக்கலாமா?

''டேய், கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்கக் கூடாதுடா.''

''ஆமாம்! கன்னத்தில் கை வச்ச அப்புறம் எப்படி நீச்சல் அடிச்சு தப்பிக்கிறது?''

- த. விக்னேஷ், ஈரோடு









தீம் பார்க்ஸ் எனப்படும் பொழுது போக்கு பூங்காக்கள் நாம் அறிய ஆரம்பித்தது கடந்த பத்தாண்டுகளில்தான். இன்றைய பொழுது போக்கு பூங்காக்களின் முன்னோடி வால்ட் டிஸ்னியின் டிஸ்னிலேண்ட்தான்! டிஸ்னி லேண்ட்க்கு முன்பாகவே பல பொழுது போக்குப் பூங்காக்கள் இருந்தாலும் புதுப்புது விஷயங்களை ஏற்றுக் கொண்டு, ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை நாளுக்கு நாள் மக்களின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டிருக்கிறது டிஸ்னிலேண்ட்.

ஜாலியாக, சந்தோஷமாக விளையாட எல்லோருக்கும் பிடிக்கும். அதிலும் குழந்தைகளுக்குப் பிடிக்கும் விளை யாட்டுகள் பெரியவர்களுக்கும் பிடிப்பது என்பது




பொன்விழா ஆண்டில் டிஸ்னிலேண்ட்!






ரொம்பவே அரிதான விஷயம். பெரியவர்கள் விளையாட்டுகள் குழந்தைகளுக்குப் பிடிக்காமல் போகலாம். குழந்தைகளையும் பெரியவர்களையும் ஒரே நேரத்தில் சந்தோஷமடையச் செய்வது என்பது மிகப் பெரிய காரியம்.






குழந்தைகள் மேல் ஆர்வமும் அக்கறையும் கொண்ட வால்ட் டிஸ்னிக்கு எல்லோரையும் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு பொழுதுபோக்கு பூங்கா அமைக்கும் எண்ணம் தோன்றியது. ஏற்கெனவே







மற்றும் டுமாரோ லேண்ட் ஆகியவை மிக முக்கிய மானவை.

ஆசிய, ஆப்பிரிக்க காடு களின் சூழ்நிலையைப் பிரதி பலிப்பது அட்வன்ச்சர் லேண்ட். இங்கு நுழைந்தால் அடர்ந்த காடுகளுக்குள் பயணிப்பது போன்ற உணர்வும் திகிலும் நமக்கு ஏற்படும். பெரிய பெரிய மரங்கள், அருவிகள், மலை கள், பிராணிகள், பூச்சிகள், பறவைகள் என திடீர் திடீர் என்று எதிர்ப்படும் உருவங்கள் அருமையான வன உலா சென்ற நிறைவைத் தருகின்றன.

கார்ட்டூன் கேரக்டர்களை வைத்து அனிமேஷன் படங் களை எடுத்து பிரபலமாகியிருந் தார் வால்ட் டிஸ்னி. இந்தப் பூங்காவில் மலைகள், ஆறுகள், அருவிகள், தேவதைகளின் கோட்டை, ரயில் வண்டி, ராக் கெட்கள் என பல விஷயங்களை யும் வைத்து 'மேஜிகல் பார்க்' ஆக உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்.

இதற்காக கலிஃபோர்னி யாவில் 160 ஏக்கர் நிலத்தை வாங்கி அரும்பாடுபட்டு, ஒவ் வொன்றையும் ரசித்து வடி வமைத்தார் வால்ட் டிஸ்னி.

1955ஆம் ஆண்டு டிஸ்னி லேண்ட் எனும் அற்புத பூங்கா திறக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு டிஸ்னிலேண்ட்க்குப் பொன்விழா ஆண்டு. இந்த மே முதல் இன்னும் 18 மாதங் களுக்கு டிஸ்னி லேண்டில் பொன்விழாக் கொண்டாட் டங்கள் நடைபெற உள்ளன.

டிஸ்னிலேண்டில் அட்வன்ச் சர் லேண்ட், ஃப்ரான்டியர் லேண்ட், ஃபேன்டசி லேண்ட்

ஃப்ரான்ட்டியர் லேண்டில் அமெரிக்காவின் வரலாறு காட்சி யாக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளின் மனதை அதிகம் கொள்ளைக் கொள்வது ஃபேன்டசி லேண்ட்தான்! இங்கு தான் தேவதைகளின் கோட்டை, பீட்டர் பேன், ஆலிஸின் அற்புத உலகம், ஸ்லீப்பிங் பியூட்டி போன்ற கதைகளின் கேரக்டர் களும் டிஸ்னியின் கார்ட்டூன் கேரக்டர்களும் உலா வருகின் றன. இவற்றைத் தொட்டுப் பார்க்கலாம்; பேசலாம்; போட்டோ எடுத்துக் கொள்ளலாம்.

டுமாரோ லேண்டில் எதிர் கால உலகம் எப்படி இருக்கும் என்பதை சித்தரித்திருக்கிறார் கள். இங்குள்ள ராக்கெட்டில் ஏறி அமர்ந்தால் நாம் நிஜமாகவே விண்வெளிக்குச் செல்வது போன்ற உணர்வு ஏற்படும். ஐம்பது வருடங்களுக்கு முன்பு

இது மிகப் பெரிய விஷயம் தானே!

டிஸ்னிலேண்டின் மெயின் ஸ்ட்ரீட்டில் தினமும் குறிப்பிட்ட நேரம் அணிவகுப்பு நடைபெறும். இதில் இங்குள்ள அத்தனை கேரக்டர்களும் பாட்டுப்பாடி, நடனமாடியபடி அணி வகுத்துச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.



மிக்கி'ஸ் டூன் டவுன் என்று புதிய பிரிவு தற்போது திறக்கப்பட்டிருக்கிறது. இது தவிர ரயில், ராட்சத ராட்டினங்கள், வண்ண நீர் ஊற்றுகள் என எல்லா இடங்களிலும் நம்மை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடிக்க நிறைய அம்சங்கள் உள்ளன.

டிஸ்னிலேண்ட் ஆரம்பித்த பத்து ஆண்டுகளுக்குள் (1965) இங்கு வந்து சென்றவர்களின் எண்ணிக்கை 5 கோடியைத் தொட்டிருக்கிறது என்றால் அதன் வசீகரத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது இல்லையா!



அமெரிக்க மக்கள் டிஸ்னிலேண்டுக்கு வந்து செல்வது தூரமாக இருந்ததால் 1971ஆம் ஆண்டு ஃபுளோரிடாவில் ஒரு டிஸ்னி வேர்ல்ட் துவக்கப்பட்டது. பிறகு பாரிஸ் மற்றும் டோக்கியோவிலும் டிஸ்னிலேண்ட் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த ஆண்டு நவம்பரில் ஐந்தாவது டிஸ்னிலேண்ட் ஹாங்காங்கில் திறக்கப்பட உள்ளது. அதன் பிறகு இந்தியாவிலும் சீனாவிலும் ஆரம்பிக்க இருப்பதாக டிஸ்னிலேண்ட் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

வால்ட் டிஸ்னி இறந்து முப்பதாண்டுகள் கழித்தும் உலகெங்கும் உள்ள மக்கள் மனதில் மிக அற்புதமான மனிதராகத் திகழ்ந்து கொண்டிருப்பதில் டிஸ்னிலேண்டுக்கு மிகப் பெரும் பங்கிருக்கிறது.

அட்டையில்:
விஷான், ஐஸ்வர்யா
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

அழ.வள்ளியப்பா நினைவு
சிறுகதைப் போட்டியில்
முதல் பரிசு பெற்ற கதை.

புலி வருது...

நகுலன் கோடரியைத் தோளில் போட்டுக் கொண்டு கையில் அரிவாளைப் பிடித்தபடி காட்டிற்குப் புறப்பட்டான்.

நகுலனின் அப்பா இருளன் ''பச்சை மரங்களை வெட்டக் கூடாதுப்பா. பச்சை மரங்கள் நமக்கு சொந்தக்காரங்க. பசுங் காடு நம்ம சொத்து. அதே மாதிரி காடுகளில் உள்ள விலங்குகளும் நம்ம உறவுக் காரங்க. அதனால மிருகங்களுக் குத் தொந்தரவு தரக் கூடாதுப்பா'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.


''போப்பா! நீ காடு முழுவதும் அலைஞ்சு பட்ட மரமாத் தேடி வெட்டினே. என்னால் அப்படியெல்லாம் வெட்ட முடியாது. கிடைச்ச மரங்களைத் தான் வெட்டிட்டு வருவேன்'' என்று ஒரே முடிவாகச் சொல்லி விட்டான்.

நகுலன் காடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். ஊருக்கருகில் இருந்த காட்டு மரங்கள் எல்லாம் திருப்பதி மொட்டைகள் போல இருந்தன. நகுலன் எல்லாவற்றையும் வெட்டி விட்டான்.

இப்போது கொஞ்சம் தள்ளி நடுக்காட்டுக்குள் செல்ல வேண்டும். இந்தப் பகுதியில் தான் காட்டு விலங்குகள் சுதந்திரமாக வாழ்கின்றன. அங்கு சென்ற நகுலன் ஒரு



கதை



புலி வருது...

காரம்புதர் அடர்ந்து இருப்பதைப் பார்த்து,

''இந்தப் புதரை வெட்டினால் ஒரு கட்டு விறகு தேரும்'' என்று கூறியபடி வெட்டத் தொடங்கினான். இதைக் கண்டதும், ''அண்ணே! அண்ணே! இதை வெட்டாதீங்கண்ணே! இது நான் வாழுற வீடு'' என்று கெஞ்சியது ஒரு கலைமான். ''இதை வெட்டலேனா நான் எப்படி விறகு கொண்டு போறது? போ...போ... வேறு இடம் பார்த்துப் போ'' என்றபடி சற்று நேரத்தில் புதரை வெட்டிக் காலி செய்து விட்டான். கலை

மான் அழுது கொண்ட சென் றது.

இன்னொரு நாள், ஒரு வேலம் புதரை வெட்டும் போது நரியும் இதே போலக் கெஞ்சி யது. ஆனால் நகுலன் இரக்கப் படவில்லை.

சில நாட்கள் சென்றன. காட்டிற்குள் சென்ற நகுலன் ஒரு கருவேலம் புதரைக் கண்டான்.

'இன்று இப் புதரை வெட்டி னால் போதும்' என்று நினைத்த படி, தோள் துண்டை எடுத்துத் தலையில் கட்டியபடி கோடரியை எடுத்து அடி மரத்தில் 'சொத்' என்று போட்டான்.

''யாரது வெட்டுறது?'' என்ற குரல் புதருக்குள் இருந்து கேட் டது.

''நான்தான் நகுலன். விறகு வெட்டுறேன்.''



விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

''அடப்பாவி நீயா? ஊரோர மிருந்த பச்சை மரங்களையெல் லாம் அழித்து விட்டு இப்போது எங்கள் பகுதிக்குள்ளும் வந்திட்டியா? இனி உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்'' என்று உறுமியபடி புலியொன்று புதரை விட்டு வெளியே வந் தது. புலி வருவதைக் கண்டதும் நகுலன் நடுங்கினான். பயத்தில் கோடரியைத் தூக்கி எறிந்து விட்டு ஓடத் தொடங்கினான். புலி துரத்தியது.

வேகமாக ஓடிய நகுலன் ஒரு புதருக்குள் மறையலாம் என்று நினைத்து ஒதுங்கினான்.

''டேய்... டேய்... இங்கு வந்தே கடித்து குதறிப்புடு வேன்'' என்று பல்லைக் காட்டி யது நரி. புலி தொடர்ந்தது. மீண்டும் ஓடினான். இன்னொரு புதரில் ஒதுங்கினான்.

''டேய்... இங்கே வந்தே, குத்திக் கொடல உருவிப்புடு வேன்'' என்றது கலைமான். மீண்டும் ஓடினான். புலி துரத்தி வந்தது. அங்கே இவனால் வெட் டப்பட்டு மீண்டும் குமுறித் தழைத்திருந்த ஒரு புங்க மரத்தில் ஏறினான். அங்கே இருந்த காகம் ''கா...கா...'' என்று கத்திக் காக்கைகளைக் கூப் பிட்டு ''அட பாவி... நான் கூடு கட்டியிருந்த மரக்கிளைகளை வெட்டி வீழ்த்தி முட்டையெல் லாம் உடைச்சியே. இப்ப எதுக்கு இங்கே வர்றே?'' என்றபடி விரட்டியது.

மீண்டும் ஓடினான். இவ

னால் வெட்டப்பட்டுத் தழைத்திருந்த புளிய மரத்தில் ஏறினான்.

"வேகமாக ஏறு தம்பி. இதோ புலி நெருங்கி வந்திருச்சு. ஏறி என் இலைகளுக்கிடையில் மறைந்து கொள். நான் புலிக்குத் தெரியாமல் மறைச்சுக்கிறேன்" என்றது புளியமரம். இவனும் ஏறி இலைகளுக்கிடையில் மறைந்து கொண்டான்.

புலி சுற்றும் முற்றும் பார்த்தது. நகுலனைக் காணவில்லை. மீண்டும் திரும்பிக் காட்டிற்குள் சென்றது. இப்போதுதான் நகுலனுக்கு உயிர் வந்தது.

"பயப்படாத தம்பி! புலி போயிடுச்சு. இதோ என் பழத்தைப் பறிச்சு சாப்பிடு. நா வறட்சி நீங்கும்" என்று கருணையுடன் கூறியது. "புளியமரமே! நான் உங்களுக்குக் கொடுத்த எவ்வளவோ தொல்லைகளை மறந்து புலியிடமிருந்து என்னைக் காப்பாற்றியிருக்கே. எப்படி நன்றி சொல்வேன்?" குரல் தழுதழுக்கக் கூறினான்.

"தம்பி! மரங்களாகிய எங்களுடைய குணம் இது. நீங்கள் எங்களை அடியோடு வெட்டிச் சாய்த்தாலும், நாங்கள் பூமியில் விழும் வரை உங்களுக்கு நிழல் கொடுத்துக் காப்போம். காய்த்துப் பலன் தருவோம். காற்றில் அசைந்து குளிர்ந்த காற்றை மேகக் கூட்டத்திற்கு அனுப்பி, மழை பெய்யச் செய்வோம். தீய காற்றைச் சுவாசித்து நல்ல காற்றை வெளியிடுவோம். ஏதும் கைமாறு கருதி இதையெல்லாம் செய்வதில்லை. எங்களுடைய குணமிது" என்றது மரம்.

"எனக்குப் புத்தி வந்தது மரமே. இனிமேல் நானும் அப்பாவைப் போல பட்ட மரங்களையே விறகுக்காக வெட்டுவேன். பச்சை மரங்களை வெட்ட மாட்டேன். இதுவரை நான் அறியாமல் செய்த குற்றங் களை மன்னித்து விடு" என்று கையெடுத்துக் கும்பிட்டான் நகுலன்.

"தவறைத் தவறுயென்று உணர்ந்து திருந்தினால் போதும் நகுலா!" என்று புளிய மரம் கூற நகுலன் இறங்கி வீட்டை நோக்கி ஓடினான்.

- சுப. வித்யா,
எட்டாம் வகுப்பு, நா.ம. அ.பெ. மேல்நிலைப் பள்ளி, புதுக்காட்டாம்பூர், சிவகங்கை மாவட்டம்



"உங்க பொண்ணு பேர் என்ன?"
"பொன்னி சார்"
"ஸ்வீட் நேம்."
"இல்லை சார், ரைஸ் நேம்!"
- இரா. முத்துவேல், தருமபுரி

என். சொக்கன்

வீட்டுக்குள்ளே கிரிக்கெட்!

வெளியே விளையாடும் போது நம்முடைய உடல் பலமாகிறது. உள்விளையாட்டுகள் இதற்கு நேரெதிர். இவற்றில் புத்திக்கூர்மைக்கும் சமயோஜித அறிவுக்கும்தான் மரியாதை.

ஆனால், வெளியே விளையாடும் அதே விளையாட்டுகளை, வீட்டினுள்ளோ, வகுப்பறையிலோ உட்கார்ந்தபடி விளையாட முடிந்தால் எப்படி இருக்கும்?

விளையாட்டில் கலந்து கொள்ளும் சிறுவர், சிறுமியர் இரண்டு குழுக்களாகப் பிரிந்து கொள்ள வேண்டும். அவரவர் குழுவுக்கு ஒரு பெயர் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு குழுவுக்கும் ஓர் அணித்தலைவர் (Captain) அவசியம்.

இப்போது, இரண்டு குழுக்களில் யார் முதலில் மட்டை வீசுவது (Batting) என்று தீர்மானிக்கவேண்டும். நிஜ கிரிக்கெட்டைப் போலவே இதற்கும் ஒரு காசைச் சுண்டிப் போட்டு பூவா, தலையா என்று பார்க்கலாம். அல்லது போட்டியை வழிநடத்துபவர் இரு அணிகளின் கேப்டன்களையும் அழைத்து, ஒரு பொது அறிவுக் கேள்வியைக் கேட்கலாம். அதற்கு யார் முதலில் சரியான பதிலைச் சொல்கிறார்களோ, அவர்களுடைய அணிதான் பேட்டிங்!

மட்டை வீசத் தேர்வாகியுள்ள அணியிலிருந்து இருவர்



மேடைக்குச் செல்ல வேண்டும். அவர்கள்தான் முதல் இரு பேட்ஸ்மேன்கள்.

இப்போது பந்து வீசும் எதிர் அணி, அவர்களில் யாரேனும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்கும். இந்தக் கேள்வி பாடம் சம்பந்தமானதாகவோ, விடுகதை, புதிராகவோ, பொது அறிவுக் கேள்வியாகவோ, கணிதப் புதிராகவோ கூட இருக்கலாம். ஆனால், ஒரே வார்த்தையில் சட்டென்று பதில் சொல்லும்படி இருக்க வேண்டும். நீண்ட, நெடிய விளக்கங்களெல்லாம் ஆகாது. ஏற்கெனவே கேட்கப்பட்ட கேள்விகளை மறுபடி கேட்கக் கூடாது.

உதாரணமாக, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் யார்?'

இந்தக் கேள்விக்கு 'ஜவஹர்லால் நேரு' என்று சரியான பதிலைச் சொல்லிவிட்டால் அந்தப் பையனுக்கு இரண்டு ரன்கள் வழங்கப்படும்.



ஒருவேளை அவனுக்குப் பதில் தெரியாவிட்டால், அவனோடு சேர்ந்து மட்டை வீசும் இன்னொருவரிடம் ஆலோசனை கேட்கலாம். அந்த இன்னொருவருக்குப் பதில் தெரிந்திருந்தால் கேள்வி கேட்கப்பட்டவருக்கு ஒரு ரன் கிடைக்கும். ஆனால், அடுத்த கேள்வி, பதில் சொன்ன அந்த இன்னொருவருக்குச் சென்றுவிடும்.

ஆனால், முதல் கேள்விக்கான பதில் இருவருக்கும் தெரியாவிட்டால் கேள்வி கேட்கப்பட்ட பையன் அவுட்! அவனுக்குப் பதிலாக அதே குழுவிலிருந்து இன்னொருவர் மட்டை வீச வரவேண்டும்.

ஒரு சின்ன உதார

ணம்.

முதல் அணியிலிருந்து ராமனும் லஷ்மணனும் மட்டை வீச வருகிறார்கள்.

எதிர் அணியிலிருந்து ஒருவர் கேள்வி கேட்கிறார். இந்தக் கேள்வி ராமனுக்கு. 'மோனலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?'

ராமனுக்கு இதற்கான பதில் தெரிந்திருக்கிறது. 'லியனார்டோ டாவின்சி' என்று அவன் பதில் சொன்னதும், அவனுக்கு இரண்டு ரன்.

முதல் கேள்விக்கு ராமன் சரியான பதில் சொல்லிவிட்டதால், இரண்டாவது கேள்வியும் அவனுக்கே செல்கிறது. 'நமது நாட்டின் முப்படைத் தலைவர் யார்?'

ராமனுக்குப் பதில் தெரியவில்லை. ஆகவே, அவன் லஷ்மணனிடம் ஆலோசனை கேட்கிறான். மற்ற அணி நண்பர்களிடம் கேட்கக் கூடாது.

லக்ஷ்மணன் 'நமது ஜனாதிபதிதான் முப்படைகளின் தலைவர்' என்று சரியான பதிலைச் சொல்கிறான். ஆகவே, ராமனுக்கு ஒரு ரன்.

ஆனால் சென்ற கேள்விக்கு லட்சுமணன்தான் பதில் சொன்னான் என்பதால், அடுத்த கேள்வி அவனுக்குதான் செல்லும். 'சூரியக் குடும்பத்தில் எத்தனை கோள்கள் உண்டு?'

'ஒன்பது' என்கிறான் லட்சுமணன். சரியான பதில் இரண்டு ரன்கள்.

இப்போது அடுத்த கேள்வியும் லட்சுமணனுக்கு. 'தலைக்காவேரி எந்த மாநிலத்தில் உள்ளது?'

லட்சுமணனுக்குத் தெரியவில்லை. ராமனைக் கேட்கிறான் அவனுக்கும் தெரியவில்லை ஆகவே லட்சுமணன் அவுட்!

இப்போது லட்சுமணனுக்குப் பதிலாக அவனுடைய அணியிலிருந்து சீதா வருகிறாள். அடுத்த கேள்வி அவளுக்குத் தரப்படுகிறது.

இப்படியே முதல் அணியிலுள்ள எல்லோரும் அவுட் ஆகும்வரை இந்த விளையாட்டு தொடரும்.

அதன்பிறகு இதேபோல் அடுத்த அணியும் மட்டை வீச வேண்டும். வெற்றி பெறுவதற்கு முதல் அணியிலுள்ள எல்லோரும் சேர்ந்து எடுத்த ரன்களைவிட, இரண்டாவது அணி அதிக ரன்கள் எடுக்க வேண்டும்.

இந்த ஆட்டத்தில் மேலும் சுவாரஸ்யம் சேர்க்க சில விதிமுறைகளைப் பின்பற்றலாம்:



1. மட்டை வீசுபவர் எந்தக் கேள்விக்கும் ஒரு நிமிடத் துக்குள் பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவுட்!

2. பந்து வீசும் அணி ஏற் கெனவே (இதே போட்டியில்) கேட்கப்பட்ட கேள்வியை மறுபடி கேட்டாலோ அல்லது தங் களுக்கே பதில் தெரியாத ஒரு கேள்வியைக் கேட்டாலோ அல்லது தங்கள் கேள்விக்குத் தவறான பதிலைச் சொன்னாலோ அந்தக் கேள்வி 'நோ பால்' என்று

அறிவிக்கப்பட்டு எதிர் அணிக்கு ஒரு ரன் கூடுதலாக வழங்கப்படும்.

3. ஒருவர் அவுட் ஆகிவிட்டால், அடுத்து யார் விளையாடுவது என்று தீர்மானிப்பது அந்த அணியின் கேப்டன்தான்!

4. ஒரே சிறுவன் / சிறுமி ஆறு கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லி விட்டால் அவர்கள் ஆட்



டத்திலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டு மற்றவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். பிறகு மற்றவர்கள் எல்லோரும் அவுட் ஆனபின் அவர்கள் மீண்டும் விளையாட வரலாம்.

5. பந்து வீசும் அணியில் யார் கேள்வி கேட்கிறார்கள் என்பதையும் நடுவர் கட்டுப்படுத்தலாம். அதாவது நிஜ கிரிக்கெட்டின் ஓவர்களைப் போல், ஒரே நபர் மொத்தம் ஆறு கேள்விகளைத் தொடர்ந்து கேட்கலாம். அதன் பின் அடுத்த ஓவர் - வேறொருவர் கேள்வி கேட்க வேண்டும்.

6. நீங்கள் கேள்வி கேட்டு எதிராளி பதில் சொல்ல முடியாமல் அவுட் ஆகி விட்டால் உங்களுக்கு ஒரு விக்கெட்.

7. ஒரு அணிக்கு அதிகபட்சமாக 60 கேள்விகள்தான் கேட்கப்படும். அதன்பிறகு அவர்கள் அணியில் விளையாடாத / அவுட் ஆகாத நபர்கள் இருந்தாலும் கூட அந்த அணியின் ஆட்டம் முடிந்து விட்டதாகத்தான் அர்த்தம்.

8. மாறாக இந்த 60 கேள்விகளுக்குள் அவர்கள் எல்லோரும் அவுட் ஆகிவிட்டால், உடனடியாக அடுத்த அணி விளையாடத் தொடங்கிவிடும்.

9. ஆட்டத்தை வழி நடத்துபவருக்கு இரு அணிகளின் ஸ்கோர் கார்டை நிர்வகிப்பது, பிரச்னை எழும் விஷயங்களில் தீர்ப்பு வழங்குவது ஆகிய பொறுப்புகள்.

10. நடுவரின் சிபாரிசுப்படி போட்டியில் அதிக ரன்கள் எடுக்கிறவருக்கு அல்லது அதிக விக்கெட்கள் எடுக்கிறவருக்கு 'ஆட்ட நாயகன்' விருது வழங்கலாம்.

ஓவியப் போட்டி முடிவுகள்

வண்ண மீன்கள்

ஜூலை இதழில் 'வண்ண மீன்கள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்து இருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...


முதல் பரிசு

ஏ. ப்ரீத்திகா,
பத்தாம் வகுப்பு,
ஆல்வேர்னியா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
கோயம்புத்தூர்



மூன்றாம் பரிசு

ஆ. பவித்ர செல்வி,
எட்டாம் வகுப்பு,
டி.எஸ்.சாரதா வித்யாலயா
பெ.மே.நி. பள்ளி, கோபி
செட்டிப்பாளையம்



இரண்டாம் பரிசு

எஸ். ஸ்ரீவித்யா,
பத்தாம் வகுப்பு, நகர மே.நி.பள்ளி,
கும்பகோணம்





ஆறுதல் பரிசு

த். ஆன்டனேட் திவ்யா,
ஆறாம் வகுப்பு,
சிறுமலர் பெ. மே.நி.
பள்ளி, நாகர்கோவில்



ஆறுதல் பரிசு

டி.சுப ப்ரியா,
பதினோராம் வகுப்பு,
தக்ஷயா அகடெமி
மெட்ரிக் மே.நி. பள்ளி,
பழனி

பாலுந் தேனும் பாட்டிலே
பண்பும் கலந்து ஊட்டியே
நாளும் நிலைத்தாள் நாட்டிலே
நல்ல ஔவைப் பாட்டியே!

ஊட்டம் பெற்றுச் சிறுவரும்
உவந்து படித்துச் சிறந்திட
கூட்டிச் சிறப்பாய்க் குணங்களைக்
கொடுத்தாள் பாட்டாய் இனித்திட!

ஆத்திச் சூடி கொன்றைவேந்தன்
ஆன்ற நல்வழி மூதுரையும்
சாத்துக் குடியாய் பிழிந்தெடுத்து
சர்க்கரை போட்டுக் குடிக்கவைத்தாள்!

வில்லாய் முதுகு கூண்விழுந்தும்
விரைத்த நாணாய்க் கோல்பிடித்தும்
வெல்லும் அம்பாய் கவிகூறும்
வெள்ளைப் பாவை ஔவையே!

கொல்லங்குடி உடையப்பன்

பண்பும் கலந்து ஊட்டியே
நாளும் நிலைத்தாள் நாட்டிலே!



கடித்தது என்ன?

எங்கள் ஊரில் 'அரிச சந்திரன்' நாடகம் நடந்தது. நாடகத்தில் அரிச்சந்திரனின் மகன் லோகிதாசனைப் பாம்பு கடித்து, அவன் அழ வேண்டிய கட்டம். மேடையில் புல் பரப்பி இருந்தார்கள். மேடைக்கு வந்த லோகிதாசனாக நடித்த பையன் திடீரென்று அலற ஆரம்பித்தான். "ஐயோ! என்னைத் தேள் கொட்டிவிட்டதே!" என்று பலமாகச் சத்தமிட்டான். மேடையின் மறைவில் இருந்த நாடக டைரக்டர் உடனே, "ஏய், பாம்பு கடித்துவிட்டது என்று சொல்லச் சொன்னால், தேள் கொட்டி விட்டது என்கிறாயே" என்று கண்டித்தார். மீண்டும் பையன், "இல்லை! தேள் தான் கொட்டிவிட்டது" என்று அழுதான். உடனே அவனை அடிப்பதற்காக மேடைக்கு வந்த டைரக்டர் கீழே தேள் ஒன்று ஓடுவதைக் கண்டார். பிறகு தான் நடந்ததை அறிந்து தேளை அடித்துவிட்டு அவனுக்கு மருந்து போட்டார்.

- ப. கந்தசாமி,
திருச்செங்கோடு



அத்தை வீட்டில்

இலங்கை எங்கே?

எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் லிங்கேஸ்வரனுக்கு எங்கள் அம்மா இந்திய வரைபடத் தைக் காட்டி 4, 5 மாநிலங்களைச் சொல்லிக் கொடுத்தார். அவனும் வெகு விரைவில் கற்றுக் கொண்டு அனைவரையும் அசத்தினான். அம்மாவும் அட்லஸை வாங்கி பத்திரப்படுத்தினார். சிறிது நேரம் கழித்து லிங்கேஸ்வரனின் பாட்டி லிங்கேஸிடம், "தம்பி, இலங்கை எங்கே இருக்குது?" என்றார். உடனே லிங்கேஸ் "இலங்கை அத்தை வீட்டிலே இருக்குது"



இலங்கை!

என்றான்! எல்லோரும் சிரித்து விட்டோம். எங்கள் வீட்டில் உள்ள அட்லஸில்தானே இலங்கையைக் காட்ட முடியும் என்பதால் லிங்கேஸ் அப்படி சொன்னான்!

- எஸ். டேனியல் லியோ பிரபு, மதுரை

வெறும் அக்கா!

நான் நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது, என் தங்கை விஜிக்கு ஒன்றரை வயது. ஒரு நாள் என் அம்மா விஜிக்கு ஆல்பம் காட்டிக் கொண்டிருந்தார். தாத்தாவை



எப்படி கூப்பிட வேண்டும், சித்தியை எப்படி கூப்பிட வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது என்னை 'ராஜி அக்கா' என்று கூப்பிடச் சொன்னார். விஜிக்கு அது சரியாக வரவில்லை. எனவே வெறும் அக்கா என்றே கூப்பிடச் சொன்னார். விஜி உடனே அக்கா என்று கூப்பிடாமல் 'வெறும் அக்கா' என்றே கூப்பிட்டாள். பிறகென்ன



சிரிப்புதான்!

- ஆர்.ராஜஸ்ரீ, கும்பகோணம்

நல்ல உள்ளம்!

நான் பதினோராம் வகுப்பு படிப்பதால், என்னைத் தவிர முக்கால்வாசி பேருக்கு மிதி வண்டி வழங்கப்பட்டது. என் தோழியின் தந்தை தன் மகளுக்கு மிதிவண்டி வேண்டாம் எனக் கூறிவிட்டார். காரணம் கேட்டால், "நான் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன், ஆயினும் என் மகளுக்கு மிதி வண்டி வாங்கிக் கொடுத்து விட்டேன். என் மகளைவிட எத்தனையோ ஏழைக் குழந்தைகள் படிக்கின்றனர், அவர்களுக்கு இது கிடைக்கட்டும் என்னும் எண்ணத்தில் செய்தேன்'' என்றார்! இந்நிகழ்ச்சி என்னைப் பெரிதும் பாதித்தது.

- இரா. கோமதி, நந்திவரம்

மாலதி

கைலாசத்துக்கு அனுப்பிய நகைகள்!

ஆகாசபுரம் என்கிற கிராமத்தில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் சுரங்க அறைகட்டி அதில் பணத்தையும் நகைகளையும் அடுக்கி வைத்துப் பார்த்தானே தவிர அரைக்காசு தானமாக யாருக்கும் கொடுத்ததில்லை. விருந்தாளிகள் வந்தால் பேசியே விரட்டி விடுவான்.

இவனுக்குப் பாடம் புகட்ட ஒருத்தன் நினைத்தான். செல்வந்தன் இல்லாத நேரமாகப் பார்த்துத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

''அப்பாடா! என்ன வெய்யில்! என்ன வெய்யில்! தானதருமம் பண்ணினாதானே மழை பெய்யும்? எல்லாம் கலிகாலம்'' என்று அங்கலாய்த்தான்.

ஒரு சொம்பு நீரோடு வந்த செல்வந்தனின் மனைவி, ''ஐயா, தாங்கள் வெளியூரா? எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டாள்.



''அம்மணி! நான் கைலாயத்திலிருந்து வருகிறேன். தங்கள் பெயர் நீலாயதாக்ஷி தானே?'' என்று கேட்டபடி நீரை வாங்கிக் குடித்தான்.

நீலாயதாக்ஷிசி கண்கள் விரிய ''கைலாசத்துலேயிருந்தா! அங்கே உங்களால் போக முடியுமா? என் பேர் உங்களுக்கு எப்படி தெரிந்தது?'' என்று கேள்விகளை அடுக்கினாள்.

''நிதானமாகக்


கேளு! உன் பெயரை உங்க மாமனார், மாமியார் தான் சொன்னாங்க! நான் ஒரு சித்தர்கிட்டே குளிகை வாங்கி இருக்கேன். அதை வாயிலே அடக்கிட்டு சிவபெருமானைத் தியானம் பண்ணினா கைலாசத்துலே இருப்பேன். போனவாரம் இறந்து போன பஞ்சாபி சாஸ்திரிகள் கூட சௌக்கியமா இருக்கார். உன்னோட மாமனார், மாமியார் தான் பாவம் கிழிஞ்ச புடவை, வேஷ்டியோட சாப்பிட எதுவுமில்லாம கஷ்டப்படுறாங்க'' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டான் புதியவன்.

''அடப்பாவமே! நீங்க மறுபடி எப்ப கைலாசம் போவீங்க?'' என்று கேட்டாள் நீலா.

''தினமும் ஒரு தடவை போயிட்டுதானே இருக்கேன்!'' என்றான் எத்தன்.

''கொஞ்சம் இருங்கோ'' என்றவள் உள்ளே போய் நிறையப் புடவைகளையும் வேஷ்டி, அங்க வஸ்திரங்களையும் மூட்டைக் கட்டிக் கொண்டு வந்தாள்.

''அம்மா! அங்கே எல்லோரும் நகைகள் அணிந்து கௌரவமாக இருக்கும்போது இவர்கள் மூளியாக இருந்தால் மதிப்பார்களா?'' என்று இழுத்தான் எத்தன்.



''எதுக்காக மூளியாக இருக்கணும்? அவர்கள் ஒன்றுமில்லாதவர்களா?'' என்றவள் உள்ளே சென்று சங்கிலி, அட்டிகை, வளையல்கள், மோதிரம், தோடு, மூக்குத்தி என்று ஏராளமான நகைகளோடு வந்தாள்.

''சிரமத்தைப் பார்க்காமல் இன்றைக்கே சேர்த்துவிடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டு வழியனுப்பினாள்.

சிறிது நேரத்தில் தனவந்தன் வீட்டுக்கு வந்தான். கொடியில் காயப் போட்டிருந்த தன் புது வேஷ்டியைக் காணாமல் திகைத்தான்.

''நீலா, இங்கே இருந்த வேஷ்டி, துண்டெல்லாம் அதற்குள்ளா காய்ந்துவிட்டது?'' என்று கத்தினான்.



இவர் எழுதிய 'செந்நூல்' (red book) அவரது நாட்டினருக்கு பைபிள் போல.

''ஏன் இப்படி கூப்பாடு போடுகிறீர்கள்? எல்லாவற்றையும் உங்கப்பா, அம்மாவுக்குத்தான் கொடுத்து விட்டிருக்கிறேன். உங்ககிட்டே பணமில்லையா? புதுசு வாங்கிக்கோங்க'' என்றாள்.

''என்ன பேசறே? எங்கப்பா, அம்மா மேல் லோகத்திலே இருக்காங்க! அவங்க வந்து உன் கிட்டே வேஷ்டி கேட்டாங்களா?'' என்று பதிலுக்கு இரைந்தான் பணக்காரன்.

''நேரிலே வந்தாதானா? செய்தி வந்தது'' என்று நடந்ததைச் சொன்னாள் நீலா.

''எவனோ ஏமாற்றி இருக்கிறான். சரி, அவன் எந்தப் பக்கம் போனான்?'' என்று கேட்டு குதிரையில் விரைந்தான் செல்வந்தன்.

தூரத்தில் செல்வந்தன் வருவதைக் கண்டதுமே ஒரு முருங்கை மரத்தின் மேல் ஏறினான் எத்தன். ஆனால் பணக்காரன் அதைப் பார்த்துவிட்டான்.

குதிரையைக் கீழே நிறுத்தி மரத்தின் மேல் ஏறினான் தனவந்தன். எத்தனோ மேலே மேலே ஏறி வேறொரு கிளைக்குத் தாவி அங்கிருந்து குதிரை மேல் குதித்துத் தப்பிவிட்டான்.

சலிப்போடு கீழே இறங்கி கால் நடையாக வீட்டுக்கு வந்த கணவனை ''சொர்க்கலோக மனிதனைப் பார்த்தீங்களா?'' என்று கேட்டாள் நீலா.

''பார்த்தேன். நடந்து போனால் நேரமாகுமென்று குதிரையில் அனுப்பி வைத்தேன்'' என்றான் அலுப்புடன்!

''அதானே! நானாவது, ஏமாறுகிறதாவது!'' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் நீலா.

கட்டங்களை நிரப்புங்கள்!

குறுக்கெழுத்துப் புதிர்




இடமிருந்து வலம்:

1. கண்ணன் பிறந்த இடம் (4)
4. தவம் செய்யும் சீலர் (2)
7. ஒலியை உள்வாங்கும் உறுப்பு (2)
8. எதையும் ______த்துச் செயல்பட்டால் பலன் உண்டு (3)
10. இந்தியாவில் உள்ள பாலைவனம் (2)
12. கடமை ___போன்றது (2)
13. சொந்த நாடு(4)

வலமிருந்து இடம்:

2. நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று (4)
3. உவகை, உணவுப் பொருளில் ஒன்று (2)
5. சாக்லேட் உங்களுக்குப் பிடிக்கும் தானே? (2)
9. ___ அனைவரும் இந்தியர்கள் (2)
11. பாலத்தைத் தாங்குவது (2)
14. சொர்க்கம் என்பதன் எதிர்ப் பதம்? (4)



மேலிருந்து கீழ்:

1. _____ இல்லாப் பெருங் கோயில்கள் கிடையாது (4)
2. நோக்கம் (4)
6. ஒரு நதி - வடமாநிலத்தில்... (3)
11. சென்னையிலிருந்து நம் தலைநகர் வெகு___ (3)
12. ___கோத்து மனிதச் சங்கிலி உருவாக்குவார்கள் (3)


கீழிருந்து மேல்:

3. இரண்டு முழ அளவு (3)
4. கண்ணாடியில் நாம் பார்ப்பது (3)
13. எங்கும் இப்படி செல்லக் கூடாது (4)
14. அனைவருக்கும் நல்ல___ தேவை (4)

- ஆர். கலைச்செல்வி
சென்னை

விடை: 67ஆம் பக்கம்

ரஹேல் செய்த அற்புத மேலங்கி!








யாருக்குப் பரிசளிப்பது?
மத குருவுக்குப் பரிசளிக் கலாம்.
நீண்ட நேரப் பயணத்துக்குப் பின் மதகுருவைச் சந்தித்தாள்.
என்னுடைய அங்கியைத் தவிர வேறு அணியக் கூடாது.
நீ வேறு ஒரு தகுதியுடைய நபருக் குக் கொடு.
பிரபலமானவர்கள் நிறைய இருக்கின்றனர்.
ரஹேல் கிளம்பினாள்.
யார் மிகவும் பிரபலமான வர்? தலைமை நீதிபதி?



நீதிபதியைச் சந்தித்தாள்.
இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
உன் அன்புக்கு நன்றி.
ஆனால், நான் சீருடை மட்டுமே அணிவேன். இதை யாருக்காவது கொடுத்து விடு.
யாருக்காவது பரிசளிக்க வேண்டும் என்ற உறுதியுடன் பயணத்தைத் தொடர்ந்தாள் ரஹேல்.
பெரிய தலைவர் ஜோஸ்வாவுக்குப் பரிசளிக்கலாம்.
ஜோஸ்வாவின் இருப்பிடத்தை அடைந்தாள.
ரஹேல் எனக்கு இந்த அழகிய அங்கி தேவையில்லை
இதை அணிய பெரிய தகுதி வேண்டும்.


அதோ... அந்த மலை உச்சியில் நின்று இஸ்ரேலைக் காவல் காக்கிறானே வீரன் ஒருவன், அவனுக்குப் பரிசளி.
கடுமையான பனி சூழ்ந்த இரவு நேரத்திலும் கடமை தவறாது தன் வேலையைச் சரியாகச் செய்கிறான்.
அவனுக்குக் கொடுத்தால் அங்கிக் குப் பெருமை!
ரஹேல் மலை உச்சியை அடைந்தாள். அந்த வீரன் வேறுயாருமல்ல, நாஹூம்தான்!
நாஹூம், அங்கியை ஏற்றுக் கொள்ளுங்கள்.
எல்லாப் பெண்களும் உன்னைப் போல் இருக்க வேண்டும்.
அன்று முதல் இஸ்ரேல் பெண்கள், வீரர்களுக்குப் பனிக்காலங்களில் கம்பளி அங்கியைப் பரிசளித்து வருகின்றனர்.

மோகனா


'ஈராக்' என்றாலே, 'ஈரான் - ஈராக்' யுத்தம்தான் நம் நினைவுக்கு வரும். உலகுக்கு முன்னோடியாய் தடம் போட்ட, நாம் மனிதனாய் நாகரிகத்துடன் நடமாட வழிகாட்டியது 'ஈராக்' தான்! ஈராக்தான் நாகரிகத்தின் தாய்! முதல் உலகப் போரின் போது, 1920-ல் நிர்பந்தத்தால், பிரிட்டிஷ் அரசாங்கத்தால் உரு வாக்கப்பட்டதுதான் 'ஈராக்' என்ற தனி நாடு! 'பாக்தாத்'தான் இதன் தலை நகரம். மிகப் பெரிய நகரமும் கூட. உலகின் மிகப் பெரிய பணக்கார நாடு

நாகரிகத்தின் தொட்டில்!




போவோமா புது உலகம்!



















களுள் 'ஈராக்'கும் ஒன்று. காரணம், அங்கு காணப்படும் வற்றாத 'பெட்ரோலிய' எண்ணெய் வளம்தான்! இதறகாகத்தான் வல்லரசு நாடுகள் ஈராக்கின மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

அன்றைய 'மெசபடோமியா' தான் இன்றைய ஈராக்! இங்குதான் பழம்பெரும் நாகரிகங்களான அசிரியா, பாபிலோனியா, சுமேரிய நாகரிகங்கள் காணப்பட்டன. இந்நாட்டுக்கு நீர்வளத்தை வாரி வழங்கும் வள்ளல்கள் யூப்ரடீஸ், டைக்ரீஸ் என்ற நதிகள்தான். மெசபடோமியா என்பதற்கு கிரேக்கத்தில் 'இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலம்' என்பது பொருள். கி.மு. 7000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சமூகத்தில் காணப்பட்ட பலவகையான நாகரிகங்கள் இங்குதான் தழைத்தன.

'நியாண்டார்தால்' மனிதர்கள், சுமார் 60,000 ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், உலகத்தின் 'ஈர்ப்பு மையமே ஈராக்'தான் என்பது விளங்கும்!

ஈராக்கிற்கு வடக்கே துருக்கியும் மேற்கே சிரியாவும் கிழக்கே ஈரானும் தெற்கே சவுதி அரேபியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. பொதுவாக அனைவரும் 'அராபி' மொழியையே பேசுகின்றனர். 97 சதம் முஸ்லிம்கள்! அதிக மக்கள் நகர்ப் பகுதியில்தான் வாழ்கின்றனர்

அரசியல் ரீதியாக அனல் பறக்கும் நாடு ஈராக்! எப்போது பார்த்தாலும் அண்டை நாடான ஈரானுடன் சண்டைதான். ஈராக்கின் பொருளாதாரம் எண்ணெய் வளத்தை நம்பியே உள்ளது. ஏராளமான இயற்கை வாயுவும் கிடைக்கிறது. கல்வி இலவசமாகவே அரசால் கொடுக்கப்பட்டாலும் நிறைய குழந்தைகள் படிப்பதில்லை. ஈரான், ஈராக் போருக்குப் பிறகு, வேலையின்மை அதிகமாக காணப்படுகிறது. அடிப்படையில் ஈராக் விவசாய நாடு. நெல், கோதுமை, பார்லி, ஆப்பிள், அத்தி, திராட்சை, ஆரஞ்சு, பேரிக்காய், மாதுளை போன்றவை பயிரிடப்படுகின்றன. பேரீச்சை அதிகம் விளைவிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஒரு நாட்டின் நாகரிகம்தான், அந் நாட்டின் தன்மையைக் காட்டும் காலக் கண்ணாடி. மெசபடோமியா வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே வளமை பெற்ற பகுதி. மற்ற சிந்து சமவெளி, எகிப்து நாகரிகங்கள் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகங்கள்தான்!







ஆனால்...மெசபடோமியா, இரு நதிகளின் இடைப் பட்ட கொடை! மெசப டோமியாவின் செல்வச் செழிப்பு, அண்டை நாடு களின் ஏழைகளை ஈர்த் தது. கி.மு. 4000ல் சுமேரிய நாகரிகம் தழைத் திருந்தது. பின் பாபி லோனிய நாகரிகம் வந் தது. கி.மு.1700ல், ஹமுராபி என்ற பாபி லோனிய மன்னன் சிறப்பாக ஆண்டான். உலக அதிசயங்களுள் ஒன்றான பாபிலோனிய தொங்கும் தோட்டம் இங்குதான் உள்ளது.



மெசபடோமியா நாகரிகம்தான் ஐரோப்பா, ஆசிய நாகரிகங்கள் வளர தூண்டுதலாக இருந்தது. கலாசாரத்தைப் பொறுத்தவரை ஈராக்தான் பழம்பெரும் பாரம் பரியம் பெற்றது! மனித வர லாற்றில் உருவான முதல் விஷ யங்கள் எல்லாம் உருப்பெற்றது மெசபடோமியாவில்தான். முக்கியமாக சுமேரிய நாகரி கத்தின் போதுதான். அமெரிக் கர்கள், ஆசியர்கள், ஆப்பிரிக்கர்கள் எல்லாம் ஆடை என்ற சிந் தனையே இல்லாதபோது இவர்கள் சிறந்த ஆடைகளை உடுத்தி யிருக்கின்றனர். 10,000 ஆண்டு களுக்கு முன்னரே விவசாயம், விலங்குகள், தாவரங்களை வளர்த் துள்ளனர்.

மனித வாழ்வையே, மாற்றிய மைத்த 'சக்கரம்' புனையப்பட்டது 5,000 ஆண்டுகளுக்கு முன்பு... சுமேரியர்கள் காலண்டர், ஏர், சக்கரம், எண், கியூனிபார்ம் எழுத் துகள், உழைப்புப் பங்கீடு போன்ற வற்றை உருவாக்கினர்.

பணத்தின் பிறப்பிடமே மெசபடோமியாதான்! கி.மு. 2500களில் முதன் முதலில் பணத்தைப் பயன்படுத்தினர். இங்கு மழை அரிதாகப் பெய் தாலும் நீர்ப்பாசனம் ஏராளமாய் செய்யப்பட்டது. விலங்குகளை வீட்டில் வளர்க்கும் பழக்கம் உருவானது. இவ்விடம் நோக்கி, பல இடங்களிலிருந்து மக்கள் வந்தனர். எனவே சமூக, பொரு ளாதார இணைப்பும் கலாசார பரிமாற்றமும் உருவானது.

ஆதாம் - ஏவாள் உட்பட பல்வேறு பைபிள் கதைகள் மெசபடோமியாவில்தான் உரு வாக்கம் பெற்றன. உலகின் தலைசிறந்த கலைஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், சிற்ப வல்லுநர்கள், கைவினைஞர்கள் ஈராக்கில்தான் வாழ்ந்தனர்.

கம்பளி ஆடை, போர்வை உற்பத்தி சிறந்திருந்தது. பாக்தாத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் தனிச் சிறப்புடன் உலகத்தரம் வாய்ந்தவை. ஈரப் பலகையில் படங்கள், குறியீடுகள் மூலமும் பின்னர் ஆப்பு எழுத்துகள் மூலமும் எழுதினர். ஆப்பெழுத்து பலகையில் பொருளியல், சட்டம், கடிதங்கள், மத நூல்கள், வரலாற்றுக் குறிப்புகள், அரசாங்க தஸ்தாவேஜுகள், அகராதி, கதைகள், கவிதைகள், விஞ்ஞானம் போன்றவை எழுதப்பட்டன. ஹமுராபி அரசன் லஞ்சம் வாங்கியவர்களைத் தண்டிக்கும் சட்டம், யூப்ரடீஸ் நதியில் தடையற்ற போக்குவரத்திற்காக சட்டம், கோயில், மதம் பற்றிய குறிப்புகளைக் கடிதமாக எழுதி வைத்துள்ளான்! உலகத்தில் தோன்றிய சட்ட தொகுதிகளுள் ஹமுராபியுடையதுதான் மிகப் பழமையானது!



இவரது நீண்ட நடைப்பயணம் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று.

பாண்டங்களில் அலங்காரமான கலை வேலைப்பாடுகள் அதிகம் இருந்தது. மண் வீடுகள் சுட்ட செங்கல்லாலும் சுடாத செங்கல்லாலும் உருவாக்கப்பட்டன. வீடுகளில் வரவேற்பறை, சமையலறை, கழிப்பறை, வேலைக்காரர்கள் தங்குமிடம் போன்ற பிரிவுகளுடன் அமைக்கப்பட்டன. இறந்தவர்கள் தனி உலகத்துக்குச் செல்வதாக நம்பினர். எனவே இந்த உடலுடன் கருவிகள், ஆயுதங்கள், நகைகள், பானைகள் போன்றவற்றைப் புதைத்தனர். இவர்களிடம் ஒப்பனைப் பொருட்கள், வாசனைப் பொருட்களின் பயன்பாடு இருந்தது. நோய்க்காக அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. மருந்தியல் பற்றியும் படித்தனர். பெண்களுக்குச் சொத்து உண்டு.


இன்றைய ஈராக் ரத்தத்தில் குளித்தது! எண்ணெய்க்காக சூறையாடப்படுகிறது. அயல்நாடுகளுக்கு அகதிகளாய் இங்குள்ள மக்கள் இடம் பெயர்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையால் ஈராக் பொருளாதாரத்தில் மிகவும் பாதிப்படைந்துள்ளது. பழம் பெருமையுடன் மனித நாகரிகத்தின் தொட்டிலாய் விளங்கிய ஈராக்கின் இன்றைய நிலை வரலாற்றின் கறுப்புப் பக்கங்கள்.

உறங்கும் மரங்கள்!

கோடை காலத்தில்தான் பொதுவாக மரங்கள் தங்கள் இலைகளை முழுமையாக உதிர்ப்பது வழக்கம். ஆனால் ஆசியா மற்றும் வட அமெரிக்காவில் உள்ள ஒக், பீச், பீல்டு மேப்பிள், ஆல்டர் போன்ற வகையைச் சேர்ந்த மரங்கள் மழைக் காலத்தில் தமது இலைகளை உதிர்த்து விடுகின்றன. இவையும் இலையுதிர் மரங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

இந்த மரங்களின் இலைகள் பெரியவையாக இருப்பதால் தண்ணீர் விரைவில் ஆவியாகி





விடும். மழைக் காலத்தில் உறைபனி இருக்கும். மேலும் மண்ணிலும் போதுமான தண்ணீர் இருக்காது. அத்துடன் குளிர் காற்றினாலும் இந்த இலைகள் அதிகமாக பாதிக்கப்படும். எனவே இத்தகைய மரங்கள் தங்கள் இலைகளை உதிர்த்து விட்டு நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றன!

- விசாகன்,
இராஜபாளையம்



உலகிலேயே மிகப் பெரிய புவியியல் வரைபட புத்தகம் ஜெர்மனியில் உள்ளது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட இந்த வரைபடம் 35 பக்கங்கள் கொண்டது. இதன் எடை 175 கிலோ!

- பி.ராஜசேகரன், மதுரை



உலகில் மொத்தம் 180 வகைக் குதிரைகள் உள்ளன. மிகக் குட்டையான வகைக் குதிரையின் பெயர் 'பாலபெல்லா.' இதன் உயரம் 75 செ.மீ. தான். பெரிய குதிரையின் பெயர் 'ஷயர்'. இதன் எடை 910கிலோ. குதிரைக்கு நல்ல நினைவாற்றல் உண்டு. இன்பமான அல்லது துன்பமான நிகழ்ச்சி நடந்த பல ஆண்டுகளுக்குப் பின்னரும் அதை நினைவில் வைத்திருக்கும்.

- சு.இலக்குமணசுவாமி, மதுரை

கிரிக்கெட் மட்டைகளை வில்லோ என்ற மரத்திலிருந்து தான் செய்கின்றனர். இம்மரம்



இங்கிலாந்தில் அதிகம் வளருகிறது. நிபுணர்கள் கண்காணிப்பில் வளர்க்கப்படுகிறது. வளைவு இன்றி நேராகவே வளரும்படி பார்த்துக் கொள்வார்கள். இத்துடன் வளரும் குருத்துகளை உடனுக்குடன் வெட்டிவிடுவார்கள். இதனால் இம்மரத்தில் முடிச்சுகள் விழுவது இல்லை. அடி மரத்தின் குறுக்களவு மார்பு உயரத்தில் பதினாறு அங்குலமாக இருக்கும். இது தான் கிரிக்கெட் மட்டை தயாரிக்க தகுதியான நிலையாகும்.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை


உலகில் அமெரிக்கர்கள்தான் மிக அதிகமாக ஐஸ்கிரீம் சாப்பிடுகின்றனர். அவர்களுக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலிய மக்களும் நியூசிலாந்து மக்களும் ஐஸ் கிரீமை அதிகமாகச் சாப்பிடுகின்றனர்.

- ஜெயஸ்ரீ, சங்கரன்கோவில்

கை குலுக்கும் பழக்கம் இங்கிலாந்தில் தான் முதலில் ஏற்பட்டது. அதன் தத்துவம் எங்கள் கையில் ஆயுதமில்லை; நாங்கள் தங்களின் பகைவர்கள் இல்லை என்று ஒருவருக்கொருவர் கை குலுக்கித் தெரிவித்துக் கொள்வர்.

- ஏ.எஸ்.யோகானந்தம், ஈரோடு

வண்ணத்துப் பூச்சி பூவுக்குச்
செல்ல வழிகாட்டுங்கள்!



ஸ்ரீரா.ரவிவர்மன்

மகத நாட்டு மன்னன் மகேந்திரனுக்கு வயதாகிவிட்டதால் தன் மகன்களில் சுந்தரன், சங்கரன், ஸ்ரீதரன் இவர்களில் யாரை மன்னராக்குவது என்ற கவலை உண்டாகியது. ஏனெனில் மூவருமே அனைத்து கலைகளையும் கற்று சிறந்து விளங்கினர். மேலும் மூவருமே மக்களின்மேல் பேரன்பு கொண்டிருந்தனர்.

ஒருநாள் மன்னர் மூவரையும் அழைத்தார். அவர்தன் மகன்களிடம், "எனக்கு வயதாகி விட்டதால், உங்களில் எவரையேனும் இந்நாட்டின் மன்னராக்க விரும்புகிறேன். ஆனால், மூவருமே அனைத்து கலைகளிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சியவர்களாயுள்ளீர்கள். உங்களில் யாரை மன்னராக்குவது என்று தெரியவில்லை. எனவே, உங்களுக்கு ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கே மன்னர் பதவி. என்ன சம்மதமா?" என்று கேட்டார்.

மூவரும் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தனர்.

மன்னர் தன் மகன்களிடம், "நீங்கள் மூவரும் ஒரு நாள் இந்நாட்டைவிட்டு வெளியே சென்று ஏதேனும் ஒரு பொருள் கொண்டுவர வேண்டும். யார் கொண்டு வந்த பொருள் சிறந்ததென நான் கருதுகிறேனோ

யாருக்கு





மன்னர் பதவி?

அவர்களுக்கே மன்னர் பதவி'' என்றார்.

முதலில் சுந்தரன் நாட்டைவிட்டுச் சென்றான். அவன் ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தபோது, 'தம்பி நில்' என்ற குரல் கேட்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அருகே இருந்த மரத் தடியில் ஒரு கிழவி துவண்டு போய் படுத்துக் கிடந்தாள்.

கிழவி சுந்தரனிடம், ''தம்பி எனக்கு மிகவும் தாகமாக உள்ளது. நீ வந்த வழியிலேயே இருபத்தைந்து கல் தொலைவு செல்வாயே யானால் அங்கு ஒரு தாமரைக் குளம் இருக்கும். அங்கிருந்து எனது தாகம் தீர்க்க தண்ணீர் கொண்டு வருவாயா?'' என்று கேட்டான்.

சுந்தரன் கிழவியிடம், ''பாட்டி, நான் உங்களுக்கு உதவ முடியா ததற்கு மிகவும் வருந்துகிறேன். ஏனெனில் நான் இப்போது ஓர் அவசர வேலையாகச் சென்று கொண்டிருக்கிறேன். நான் உங்களுக்

குத் தண்ணீர் கொண்டு வரச் சென்றால் மிகவும் காலதாமத மாகிவிடும். எனவே, என்னை மன்னியுங்கள்'' என்றான்.

கிழவி சுந்தரனிடம், ''தம்பி, நீ எனக்கு உதவ இயலாவிட்டாலும் பரவாயில்லை. இந்தா, இந்தக் குடுவையை வைத்துக் கொள். இதில் உன்னை உன் வாழ்நாள் வரை என்றும் இளமையோடு வைத்திருக்கும் மருந்து உள்ளது. இதை வைத்துக் கொண்டு நீ மகிழ்ச்சியாக வாழ்'' என்றாள்.

குடுவையை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்ட சங்கரன், 'இதைவிட வேறெந்த பொருளும் சிறந்ததாக இருக்க முடியாது' என்று எண்ணி அரண்மனைக்கு வந்து தன் தந்தையிடம் நடந்ததைக் கூறினான்.



நம் மீது படையெடுத்த ஒரு நாட்டின் தலைவர்.

மன்னரும் அவன் கொண்டு வந்த பொருளைப் பார்த்து அவனைப் பாராட்டினார்.

அடுத்து சங்கரன், சுந்தரன் சென்ற அதே திசையிலேயே காட்டை நோக்கிச் சென்றான். வழியில், அதே கிழவியைச் சங்கரனும் கண்டான். கிழவி, சுந்தரனிடம் வேண்டியதைப் போலவே சங்கரனிடமும் வேண்டினாள். சங்கரனும் சுந்தரன் கூறிய அதே பதிலைக் கூறினான்.

கிழவி சங்கரனிடம், ''தம்பி, நீ எனக்கு உதவ இயலாவிட்டாலும் பரவாயில்லை. இந்தா இந்தக் குடுவையை வைத்துக் கொள். இதில் உன்னை ஆயிரம் ஆண்டுகள் என்றும் இளமையோடு வாழ வைக்கும் மருந்து உள்ளது. இதை வைத்துக் கொண்டு நீ மகிழ்ச்சியாக வாழ்'' என்றாள்.

குடுவையை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்ட சங்கரன், 'இதைவிட வேறெந்த பொருளும் சிறந்ததாக இருக்க முடியாது' என்று எண்ணி அரண்மனைக்கு வந்து தன் தந்தையிடம் நடந்ததைக் கூறினான். மன்னரும் அவன் கொண்டு வந்த பொருளைப் பார்த்து அவனைப் பாராட்டினார்.

ஸ்ரீதரனும் மற்ற இருவர் சென்ற அதே திசையிலேயே காட்டை நோக்கிச் சென்றான். மற்ற இருவர் கண்ட அதே கிழவியை ஸ்ரீதரனும் கண்டான்.

மற்ற இருவரிடம் வேண்டிய தைப் போலவே ஸ்ரீதரனிடமும் கிழவி வேண்டினாள். ஆனால், ஸ்ரீதரன் மற்ற இருவரைப்போல் மறுப்பேதும் கூறாமல் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தான்.

தண்ணீரைக் குடித்த கிழவி புத்துணர்ச்சிப் பெற்றாள்.

கிழவி ஸ்ரீதரனிடம், "தம்பி, உன் அவசர வேலைக்கிடையிலும் சுயநலம் பார்க்காமல் எனக்கு உதவினாய். உன் உதவிக்கு மிக்க நன்றி" என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றாள்.

நேரமாகிவிட்டதால் ஸ்ரீதரன் அதற்கு மேல் தொடர்ந்து செல்லாமல், தன் தந்தையிடம் சென்று நடந்ததைக் கூறினான்.

'ஸ்ரீதரன் ஏதும் பொருள் கொண்டு வராததால், தம் இருவரில் எவரேனும் ஒருவருக்குத்தான் மன்னர் பதவி கிடைக்கும்' என சுந்தரனும் சங்கரனும் நினைத்தனர். ஆனால், மன்னரோ 'ஸ்ரீதரனுக்கே மன்னர் பதவி' என்று கூறியதைக் கேட்டு இருவரும் அதிர்ந்து நின்றனர்.

"சுந்தரா, சங்கரா! மன்னராகப் போகும் ஒருவருக்குத் தன் மக்களிடம் அன்பும் அரவணைப்பும் இருக்க வேண்டும். அதே சமயம், அவர்களுக்கு உதவி தேவை எனும்போது, நமக்கு எத்தகைய அலுவல் இருப்பினும் சுயநலம் பார்க்காமல் உதவ வேண்டும்.



"ஓட்டப்பந்தயத்திலே முதல் பரிசு வாங்குனீங்கன்னு கேள்விப்பட்டோம். உங்க வெற்றிக்குப் பின்னால் இருந்தவங்க யார்?"

"எனக்குப் பின்னால் ஓடி வந்தவங்கதான்!"

– ஆர்.ஆர்.பூபதி, கன்னிவாடி

ஸ்ரீதரன் அந்தப் பாட்டிக்கு உதவி தேவைப்பட்டபோது, சுயநலம் பார்க்காமல் உதவினான். ஆனால், நீங்கள் பொருள் கொண்டு வந்திருப்பினும், உதவி தேவைப்பட்ட ஒருவருக்கு உதவவில்லை. எனவே, ஸ்ரீதரன் பொருள் ஏதும் கொண்டு வராமலிருப்பினும், சுயநலம் பார்க்காமல் அந்தப் பாட்டிக்கு உதவியதால் ஸ்ரீதரனுக்கே மன்னர் பதவி என்று மன்னர் கூறியதைக் கேட்ட சங்கரனும் சுந்தரனும் மன்னரின் சொல்லுக்கு மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தனர்.

நகரத்து வாழ்க்கையில் இதுபோன்ற விளையாட்டுகள் எல்லாம் மிகவும் குறைந்து போய் விட்டன. இங்கே இரண்டு விளையாட்டுகளைத் தந்திருக்கிறேன். விளையாடி மகிழுங்கள்; அனுபவத்தை எழுதுங்கள்!

கேள்வி கேட்க வேண்டும். பெண் என்றால் பாட்டி என்றும் பையன் என்றால் தாத்தா என்றும் மாற்றிக் கொள்ளுங்கள்.

நண்பர்கள் : பாட்டி, பாட்டி மணி எத்தனை?

பாட்டி : 12

நண்பர்கள் : பாட்டி, பாட்டி எங்கே போறே?

பாட்டி : பேரன் வீட்டுக்கு.



பாட்டி, பாட்டி

1. ஒரு கையில் குச்சியுடன், செருப்பு அணிந்து கொண்டு குனிந்தபடி ஒரு பையனோ, பெண்ணோ நடக்க வேண்டும். மற்ற நண்பர்கள் அவளிடம்

நண்பர்கள் : பேரன் வீடு எங்கே இருக்கு?

பாட்டி : காட்டுக்குள்ளே...

நண்பர்கள் : நாங்களும் வர்றோமே!

பாட்டி : வழியெல்லாம் முள்ளு குத்துமே

எங்கே போறே?



நண்பர்கள் : நீ என்ன செய்வே?

பாட்டி : செருப்புப் போட்டிருக்கேன்

நண்பர்கள் : எனக்கொரு செருப்புக்கொடு

பாட்டி குச்சியை எடுத்துக் கொண்டு கோபமாக வர, நண்பர்கள் ஓட வேண்டும். பாட்டி குச்சியால் யாரைத் தொடுகிறாளோ அவள் பாட்டியாக மாறி மீண்டும் பாட வேண்டும்.

II. எலி என்ன செய்யுது?

நண்பர்கள் வட்டமாக கைகோத்துக் கொண்டு நிற்க வேண்டும். நடுவில் ஒரு பையனோ, பெண்ணோ எலியாக நிற்க வேண்டும். வட்டத்துக்கு வெளியே ஒருவர் பூனையாக நின்று கொள்ள வேண்டும்.

பூனையாக நிற்பவர் : எலி என்ன செய்யுது?

வட்டத்திலிருப்பவர்கள் : தூங்குது

பூனை : எலி என்ன செய்யுது?

வட்டத்திலிருப்பவர்கள் : பல் தேய்க்குது

பூனை : எலி என்ன செய்யுது?

வட்டத்திலிருப்பவர்கள் : குளிக்கிது

பூனை : எலி என்ன செய்யுது?

வட்டத்திலிருப்பவர்கள் : டிரஸ் பண்ணுது

பூனை: எலி என்ன செய்யுது?

வட்டத்திலிருப்பவர்கள் : சாப்பிடுது

பூனை : எலி என்ன செய்யுது?

வட்டத்திலிருப்பவர்கள் : பள்ளிக்கூடம் கிளம்புது. என்றவுடன் எலி வட்டத்தை விட்டு வெளியேறும். பூனை பிடிக்க வரும். பூனையிடம் இருந்து தப்பிக்க எலி வட்டத்துக்குள்ளும் வெளியேயும் மாறி மாறி ஓடும். பூனை வட்டத்துக்குள் நுழைய, வட்டத்திலிருப்பவர்கள் தடுக்க வேண்டும். பூனை எலியைப் பிடித்து விட்டால் மற்ற இரண்டு பேர் எலி, பூனையாக மாறி விளையாட்டைத் தொடர வேண்டும்.

சுவாரசியமான விளையாட்டுகள்; அலுக்கவே அலுக்காது!

கோடை விடுமுறைப் போட்டி - II முடிவு

மிக மிக எளிதாக இருந்திருக்கிறது கோடை விடுமுறைப் போட்டி - II. எல்லோரும் சரியான விடைகளை அளித்திருந்ததால் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



ரூ.20/- பரிசு பெறுவோர்:

1. எஸ். மாதவன், மும்பை
2. எஸ். அஸ்வினி, சென்னை
3. பி.என். நாகராஜன், நாகமங்கலம்
4. எஸ். அனுசுயா, நாகர்கோவில்
5. மா.சாணக்கியன், பண்ருட்டி
6. ஜி.பொன் சுவேதா, திண்டுக்கல்
7. அ.கோகேஸ்வரி, சங்கராபுரம்
8. போ.வெங்கடலட்சுமி, கு.கமுகாசலபுரம்
9. ஐ.ராஜானந்த், பாண்டிச்சேரி
10. மு.மேகலா சாந்தி, கமுதி

சரியான விடை:

அப்துல் கலாம்
மன்மோகன் சிங்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

உங்கள் நூலகம்

என்லனக் கூட்டிட்டுப் போங்க - மு. அப்பாஸ் மந்திரி, பக்-104, ரூபாய் ஐம்பது, மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

தமிழ் படிக்கும் சிறுவர் உலகுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் சிறுகதைத் தொகுப்பு இது. 19 கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு விதம். ஒரு புதிய சிந்தனையை, அறிவுரையை வழங்குகிறது. பெரிய அளவிலான நூல். ஓவியங்கள் அழகூட்டுகின்றன.

உலக அதிசயங்கள் - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக்-84, ரூபாய் நாற்பது, மணிமேகலைப் பதிப்பகம், 7, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

உலக அதிசயங்களெனக் கடந்த நூற்றாண்டில் அடையாளம் காணப்பட்ட ஏழு அதிசயங்களோடு சேர்த்து மொத்தம் இருபத்தாறு அதிசயங்களைப் பட்டியலிட்டு அவை குறித்த அதிசய விவரங்களைத் தொகுத்தளித்துள்ளார் ஆசிரியர். பெரிய அளவிலான நூல். நல்ல முயற்சி. தகவல்கள் சுவையாக உள்ளன.

கதைப் புதிர்கள், எ. சோதி, பக்-128, நன்மொழிப் பதிப்பகம், 4. கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 3

38 கதைகள். ஒவ்வொரு கதையும் ஒரு புதிருடன் முடிவடைகிறது. மூளையைக் கசக்கி புதிருக்கான விடையைக் கண்டுபிடிக்க வேண்டும். படிப்பதற்கு சுவாரசியமாக இருக்கிறது. விடை தெரியாதவர்களுக்கு விடையும் கொடுத்திருக்கிறார் ஆசிரியர்.



மாய மந்திரக் கதைகள், எ.சோதி, பக்-128, நன்மொழிப் பதிப்பகம், 4, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 3

பறக்கும் தங்க மயில், பேரழகி வலிசா, தவளை இளவரசி, பனி வண்ண அழகியும் ஏழு குள்ளர்களும், மந்தாரத் தூரிகை என சற்று நீளமான 5 கதைகள் கொண்ட தொகுப்பு. படங்களும் நிறைய இருக்கின்றன.

- ரே

துப்பறியும் துஷ்யந்த்!

1

கதை: மாயூரன்
படம்: ராம்கி









வரும்போது பரிசு ஏதாவது வாங்கிட்டு வந்துடுங்க.
ஓ.கே.
ஸார்! ஸார்!
யார் அது?
நான் தொழிலதிபர் சந்திரசேகர்.
சொந்த விஷயம். அவசரம், ரகசியமாகப் பேசணும்.
அந்த அறைக்கு வாங்க.
என் மகள் வசந்தியை ரெண்டு நாளா காணோம். தெரிஞ்சவங்ககிட்டே விசாரிச்சுட்டேன்.
தொலைபேசியில் யாரோ கூப்பிட் டாங்களாம். பிறகு சிறிய கைப் பெட்டியுடன் கிளம்பினாளாம். வீட்டிலே சொல்றாங்க.
கவலைப்படாதீங்க. விவரமாக எழுதிக் கொடுங்க.


ரகசியமாக விசாரிக்கணும். வெளியில் தெரிஞ்சா பேரு கெட்டிடும்.
வசந்தியின் சமீபத்திய போட்டோ இருக்கா?
கொண்டு வரலை. கொடுத்து அனுப்புறேன்.
யார் மீதேனும் சந்தேகம் உண்டா? விரோதிகள் யாராவது...
விரோதிகள் யாரும் இல்லை.
உடனே விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன்.
மாலை வினோத் வீட்டில்-
வாங்க சரியான நேரம் தான்.


துஷ்யந்த், வினோத்திடம் பரிசு கொடுத்தான்.
வினோத், பிறந்த நாள் வாழ்த்துகள்!
வினோத், உன் நண்பர்கள் வந்தாச்சா? கேக் வெட்டலாமா?
ரெடிப்பா!
மெழுகுவர்த்தியை ஊதி அணைச்சிட்டு கேக்கை கட் பண்ணு.
நான் உள்ளே வரலாமா?
அடடே மைக்கேலா! வாங்க...
(தொடரும்)


கோகுலம்
போஸ்டர்
Sabelt



கார் பந்தய வீரர்

நரேன் கார்த்திகேயன்







இருட்டு

டாக்டர் கு.கணேசன்

அன்புள்ள

டாக்டருக்கு,

எனக்கு இருட்டு என்றாலே பயம். இரவில் யாருமில்லாத அறையில் எதையாவது எடுக்க வேண்டும் என்றால் கூட பயப்படுவேன். எனக்கு ஏதாவது வழி சொல்லுங்கள்.

- த. இந்துமதி,

ஆரணி

சிறு வயதில் இருட்டைக் கண்டு பயப்படாத குழந்தைகளைக் காண்பது அரிது. குழந்தைகள் வளர வளர இந்தப் பயம் தானாகவே மறைந்து போகும். பதினைந்து வயதிற்குப் பிறகும் இந்தப் பயம் நீடித்து, அன்றாட வேலைகளைப் பாதிக்குமானால் இது ஒரு நோயாகக் கருதப்படும். 'அக்ளுவோஃபோபியா' (Achluophobia) என்று இதற்குப் பெயர்.


குழந்தைகளின் அடி மனதில் ஆழப் பதிந்துள்ள சில நிகழ்வுகள்தான் இந்தப் பயத்திற்கு முக்கியக் காரணம். எடுத்துக்காட்டாக, இரவில் உறங்காமல் அடம்பிடித்து அழும் குழந்தைகளை அடக்கப் பெற்றோர் இருட்டைக் காண்பித்து அங்கு பூதம் இருக்கிறது, பேய் ஆடுகிறது என்றெல்லாம் பயமுறுத்தி இருப்பார்கள். இருட்டில் வீட்டின் ஜன்னலுக்கு வெளியே மரங்கள் ஆடும்போது, பேய் ஆடுவதாக நினைத்துக் குழந்தை பயப்படும். அப்போது அதன் பெற்றோர் குழந்தையிடம் 'நீ பார்ப்பது பேய் இல்லை கண்ணா! அது மரத்தோட நிழல்' என்று விளக்கினால் குழந்தைக்குப் பயம் தெளிந்து விடும். மாறாக பல பெற்றோர் 'ஆமாடா அங்கே பேய்தான் இருக்கு. நீ தூங்காம முழிச்சிக்கிட்டே இருந்தா உன்னைப் பிசாசு வந்து பிடிச்சிட்டுப் போயிடும். பேசாம படுத்துத் தூங்கு' என்று அதட்டி உறங்க



மனமே நலமா?

வைப்பார்கள். இம் மாதிரிச் சூழல்கள் அடிக்கடி நிகழ்ந் தால் குழந்தைகளின் மனதில் பய உணர்வு என்பது அழியாத தடமாகப் பதிந்து விடும். அதன் விளைவால் 'அக்ளூவோஃபோபியா' ஏற்படும். உனக்கும் இம்மாதிரியான அனுபவங்கள் சிறு வயதில் ஏற்பட்டு இருக்கலாம்.

இருட்டுப் பயத்தைப் போக்க கீழ்க் காணும் வழிகளைப் பின்பற்றிப் பார்.




முதலில் இருட்டு பற்றிய உண்மையை நீ புரிந்து கொள்ள வேண்டும். இரவில் வரும் இருட்டு காலச் சுழற்சியில் இயற்கை யாக வருவது. இருட்டு நிரந்தர மல்ல; இரவு மறைந்து பகல் வர, வெளிச்சம் வந்து விடும். அறிவியலைப் படிக் கின்ற உனக்கு இந்த உண்மை தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. ஆகவே இருட் டைக் கண்டு பயப் படுவது அர்த்தமற் றது என்று நீ நம்ப வேண்டும். அப்போது தான் இருட்டு பயம் விலகும்.

அடுத்து, நீ உறங்கச் செல்லும்போது இருட்டறையில் இரவு விளக்கு எரிய வை. உன் பெற்றோர் அல்லது மூத்த உடன் பிறப்புகளைப் பக்கத்து அறையில் படுத்துக் கொள்ளச் செய்து, உன் அறைக் கதவை ஒருக் களித்துச் சாய்த்து வைத்து, நீ குரல் கொடுத் தால் உடனே உதவிக்கு வருவார்கள் எனும் நம்பிக் கைச் சூழலை அமைத் துக் கொள். நீ உறங்கி யதும் இரவு விளக்கை அணைத்துவிடச் சொல். காலையில் எழுந்ததும் உனக்கு இருட்டு பயம் குறைந்திருக்கும்.

இப்படியும் செய்யலாம். பகலில் உன் அறையில் கதவு மற்றும் ஜன்னல் களை மூடி செயற்கையாக இருட்டை ஏற்படுத்தி அதில் உறங்கு. அதே அறையில்தானே இரவிலும் உறங்குகிறோம்; பிறகேன் இருட்டைக் கண்டு பயப்பட வேண்டும் என்று நீயே உன்னைக் கேட்டுப் பார். மனதில் ஒரு தெளிவு கிட்டும். உன் பயம் விலகும். இதற்குப் பிறகும் பயம் நீடித்தால் மனநல மருத்துவரின் ஆலோசனையை நேரில் பெற்றுக்கொள்.

என்றால் பயம்!

ஆர்.பொன்னம்மாள்



வடநாட்டை ஆண்ட அரசனுக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். மூத்த பிள்ளை ராயசிங். இளையவன் அங்கதபூபதி. தந்தைக்குப் பின் ராயசிங் சிம்மாசனமேறினான்.

அங்கத பூபதியின் மனைவிக்குக் கடவுள் பக்தி அதிகம். ஒரு சமயம் தன் குருநாதரை அழைத்து பாத பூஜை செய்ய ஏற்பாடு செய்தாள்.

பூபதி, ''யார் வரப்போகிறார்கள்?'' என்று கேட்டான்.

''குருநாதர் வருகிறார். அவருக்குப் பாத பூஜை செய்யப் போகிறேன்'' என்றாள் பூபதியின் துணைவி.

''தினமும் எனக்குப் பாத பூஜை செய்வது எதற்காக?'' என்று அவளை மடக்கினான்.

''தாங்கள் என் புருஷன்'' என்றாள்.

''புருஷனா, குருவா யார் முக்கியம் என்று முடிவு செய்துகொள்.



பூரிக்கு வந்த வைரப் பதக்கம்!

குருதான் என்றால் நாளை முதல் எனக்குப் பாத பூஜை வேண்டாம். உன் குரு, கடவுளை கண்முன் கொண்டு வந்து நிறுத்தட்டும். அப்புறம் பாதபூஜை பண்ணலாம்'' என்று கடுமையாகச் சொன்னான் அங்கதபூபதி.

நெருப்பில் விழுந்த புழுவாய் துடித்தாள் மனைவி. குருவுக்குப் பாத பூஜை பண்ணாமல் இருக்க முடியவில்லை! அதனால் உண்ணாமல், உறங்காமல், தண்ணீரும் அருந்தாமல் மூன்று நாட்கள் யோகத்தில் ஆழ்ந்தாள் பூபதியின் மனைவி.

ஸ்ரீமந் நாராயணன் பூபதியின் கனவில் தோன்றி ''கடவுளைக் காட்டுவாயா? என்றாயே! இதோ வந்து விட்டேன். நீயும், நானும் ஒன்றா?'' என்று கேட்டார்.

விழித்து எழுந்தவன் மனைவியிடம் ஓடி வந்து தன் கனவைக் கூறி தன்னை மன்னித்து உண வருந்தும்படி வேண்டினான். அது முதல் தம்பதிகள் இணைந்து இறைவழிபாடு நடத்தினர்.

பகையரசன் ஒருவன் படையெடுத்து வர அங்கதபூபதி படை நடத்திச் சென்றான். வீரமாகப் போரிட்டு வெற்றியும் பெற்றான். ஏராளமான பொன், வெள்ளி, நவரத்தினங்களைக் கொண்டு வந்தான். அதில் ஓர் அபூர்வமான வைரப் பதக்கம் இருந்தது. அதை மட்டும் தான் வைத்துக் கொண்டு மற்றவற்றை ஏழை, எளியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டான்.

ராயசிங்குக்கு வேண்டியவர்கள், ''பொருட்களைப் பொக்கிஷத்தில் சேர்ப்பதுதானே முறை! அப்படியிருக்க எல்லாவற்றையும் விநியோகித்து விட்டார்!'' என்று கோள் மூட்டினர்.

''அற்புதமான வைரம் என்கிறார்கள். அதை மட்டுமாவது கேளுங்கள்'' என்று தூண்டினாள் அவர் மனைவி.

வைரப்பதக்கத்தைக் கேட்டனுப்பினார் ராயசிங்.

''அதை ஜகந்நாதப் பெருமானுக்கென்று எடுத்து வைத்திருக்கிறேன்'' என்று சொல்லி அனுப்பினான் பூபதி.

சகோதரியிடம் ''வெற்றி மமதை தலைக்கேறி விட்டது. இனி என்ன வேண்டுமானாலும் செய்வான். அவனை உயிரோடு விட்டால் ஆபத்து. உணவில் விஷத்தைக் கலந்துவிடு. என் கண்ணெதிரில் அது நடக்க வேண்டும். அவனை விருந்துக்கு அழை'' என்றான் ரகசியமாக.

யார் இந்தப் பிரபலம்?



சீன கம்யூனிஸ்ட் கட்சியை 1921ல் உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தவர்.

வேறு வழியில்லாமல் தமையன் சொன்னபடி செய்தாள் தங்கை. மூவரும் சாப்பிட அமர்ந்தனர்.

"ஈஸ்வரனுக்கு அர்ப்பணம்" என்று சொல்லிவிட்டுச் சாப்பிடுவது பூபதியின் பழக்கம். அன்றும் அதுபோல் சொல்லி விட்டு வாயில் போட முனைந்தான் தம்பி.

ரத்த பாசம் துடித்தது. கையைப் பிடித்தான் ராயசிங்.

"தம்பி, சாப்பிடாதே! அதில் விஷம் கலந்திருக்கிறது" என்றார்.

"அண்ணா! அர்ப்பணம் என்றதுமே அன்னத்திலுள்ள தோஷத்தை ஆண்டவன் நீக்கியிருப்பார்" என்று கூறி அதைச் சாப்பிட்டான் பூபதி.


கொடிய விஷம் பூபதியை எதுவும் செய்யவில்லை. ஆயினும் மனம் கசந்து விட்டது. நேரே மனைவியிடம் சென்று நடந்ததைக் கூறி, "பூரி ஜகன்னாதம் போகிறோம். புறப்படு" என்றார்.

அழகிய காட்டாறு. குதிரையை மரத்தில் கட்டிவிட்டு சற்றே இளைப்பாறினர் பூபதியும் அவர் மனைவியும்.

மந்திரி படைகளோடு சுற்றி வளைத்துக் கொண்டார். "வைரப் பதக்கத்தைக் கொடுத்துவிட்டு எங்கு வேண்டுமானாலும் போகலாம்" என்றார் அமைச்சர்.

மடியிலிருந்து வைரப்பதக்கத்தை எடுத்து நதியில் வீசி எறிந்தார் பூபதி. "இதன் பொருட்டு ஒரு படையா? இது ஜகன்னாதன் சொத்து" என்றார்.

படை வீரர்கள் நதியில் மூழ்கித் தேடினர். வைரப்பதக்கம் எவர் கையிலும் சிக்கவில்லை!



"மூணு மாடிக் கட்டடத்திலே இருந்து ஒருத்தன் கீழே விழுந்தான். சின்னக் காயம்கூட படலை! எப்படி?"

"ஏன்னா, எல்லாம் பெரிய பெரிய காயமாச்சே!"

- மு. ராஜேந்திரன்,
க.தருமத்துப்பட்டி

"அறிவிலிகளே! ஜகந்நாதத்தில் போய்ப் பாருங்கள் கிடைக்கும்" என்றார் பூபதி. அங்கத பூபதி தம்பதியினரோடு படை நடத்திக் கொண்டு 'பூரி' போய்ச் சேர்ந்தார் அமைச்சர்.

சன்னதியில் தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. தீப ஒளியில் வைரப்பதக்கம் பல வண்ணங்களை வாரி இறைத்தது. "ஏது இது?" என்று அர்ச்சகரிடம் விசாரித்தார் அமைச்சர்.

"நேற்று இரவு என் கனவில் இன்ன இடத்தில் தேடினால் வைரப் பதக்கம் கிடைக்கும். எடுத்து அணிவி" என்று அடையாளம் சொன்னார் பகவான். இன்று காலை சொன்ன இடத்தில் தேடினோம். இது கிடைத்தது" என்றார் அர்ச்சகர்.

மந்திரி ராயசிங்குக்கு நடந்ததை எழுதி அனுப்ப, ராயசிங் தங்கையுடன் பூரி வந்து தம்பியிடம் மன்னிப்புக் கேட்டு, தம்பி குடும்பத்தை அழைத்துச் சென்றார்.

கோடி ரூபாய் ஓவியம்!

'வான் கா' என்பவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய ஓவியர் அவர்! அவர் தீட்டிய ஓவியங்களுக்கு இப்போது





கூட உலகம் முழுக்க ஒரே மவுசுதான்! ஒவ்வொன்றின் மதிப்பும் பல கோடி ரூபாய்!

வான் காவின் அப்பா ஒரு மத போதகர். அவரது அப்பாவிடமிருந்து வான் காவுக்கு ஏகப்பட்ட உபதேசங்கள்தான் கிடைத்தன. நல்லதொரு வாழ்க்கை அமையவில்லை. கூடவே ஒருவித தாழ்வு மனப்பான்மையும் வந்துவிட ''ஐயோ! வான் காவா? ரொம்ப முரட்டுப் பையனாச்சே!'' என்று பெயர் எடுத்தார்.

பதினாறு வயதில், ஓவியக் கூடம் நடத்திய உறவினர் ஒருவருக்கு எடுபிடிவேலை செய்வதற்காக வான்கா அனுப்பி வைக்கப்பட்டார். அங்குதான் அவருக்குத் தூரிகையும் வண்ணங்களும் அறிமுகமாயின.

பிழைப்புத் தேடி லண்டன் போனார். அங்கே வேலை ஏதும் கிடைக்கவில்லை.


மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில், காலம் ஓடியது. மண வாழ்க்கை சரியாக அமையவில்லை. தன் மன ஆறுதலுக்காக ஓவியங்கள் வரைய ஆரம்பித்தார். அப்போது அவரது ஓவியங்களை வாங்க ஆளில்லை. இதனால் மன நோய்க்கு ஆளானார். 1890ல் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக்

• ஒட்டகச்சிவிங்கி சவாரி



கொண்டு இறந்து போனார் வான்கா.

ஓர் எண்ணெய் வியாபாரிக்கு மூன்று மகன்கள். முழுவதும் எண்ணெய் நிரம்பிய ஏழு டின்கள். பாதி அளவுக்கு மட்டும் எண்ணெய் நிரம்பிய ஏழு டின்கள். ஏழு காலி டின்கள் என்று வரிசையாக வைத்துவிட்டு தன் மூன்று



* எலியைச் சாப்பிடத்தான் முடியாது!

மகன்களையும் அழைத்தார். அவர்களிடம், இங்குள்ள எல்லா எண்ணெய் டின்களையும் நீங்கள் மூன்று பேரும் சரிசமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரிடமும் முழு டின்கள், பாதி நிரம்பிய டின்கள், காலி டின்கள்



* சேவல் வாக்கிங்...

என்று ஒவ்வொன்றும் ஒரே எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்று கண்டிஷன் போட்டார் வியாபாரி!

புத்திசாலியான மூத்த மகன், சிறிது நேரம் யோசித்தான். அதன் பின் கிடுகிடுவென்று செயலில்

* குதிரை சக்தி!



இறங்கினான். ஐந்தாவது நிமிடத்தில் அப்பா போட்ட கண்டிஷன்களின்படி எண்ணெய் டின்களைச் சரிசமமாகப்

பிரித்துக் கொடுத்து விட்டான். எண்ணெய் வியாபாரியின் மூத்த மகன் எப்படி எண்ணெய் டின்களைச் சரிசமமாகப் பிரித்துக் கொடுத்தான் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்! விடை கடைசியில் தரப்பட்டுள்ளது!

இரண்டு தீவிரவாதிகள், நகரத்தின் பிரதான வணிக வளாகத்தில் குண்டு வைப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டு விட்டார்கள்.



காரை ஓட்டிக் கொண்டிருந்த தீவிரவாதியிடம், இரண்டாவது தீவிரவாதி சொன்னான்:

''வேகமாகப் போ! தாமதமானால், நான் பதுக்கி வைத்துள்ள வெடிகுண்டு, கட்டடத்தில் கொண்டு போய் வைப்பதற்கு முன்பாகவே வெடித்து விடும்.''

அதற்கு, முதல் தீவிரவாதி சொன்னான்: ''அதுபோல ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது என்று சமயோஜிதமாக இரண்டாவது குண்டை கொண்டு வந்திருக்கிறேன்!''

ஒருவர், ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, ஒரு நியூஸ் பேப்பரை சிறுசிறு துண்டுகளாகக் கிழித்து, ஜன்னல் வழியே போட்டுக் கொண்டே இருந்தார். இதை வெகு நேரமாய் கவனித்துக் கொண்டிருந்த பக்கத்து சீட்காரர் குழப்பத்துடன், ''எதற்காக இப்படி செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.


ஜன்னல் ஓர சீட்காரர், ஓ! இதுவா? யானைகள் ரயிலை வழிமறிக்காமல் இருக்க ஒரு நூதன டெக்னிக்'' என்றார்.

கேள்வி கேட்டவருக்குக் குழப்பம் அதிகமாகிவிட்டது. ''இங்கே தான் யானைகளே தென்படவில்லையே!'' என்றார்.

அதற்கு ஜன்னல் சீட்காரரின் பதில், ''பார்த்தீர்களா? என் டெக்னிக் எப்படி வேலை செய்கிறது!''

விடை: ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் இந்தப் புதிருக்கு விடை சொல்லலாம். ஒரு முழு எண்ணெய் டின்னை எடுத்து அதிலிருக்கும் எண்ணெயில் பாதியை ஒரு காலி டின்னில் கொட்டிவிடுங்கள். இப்போது, ஆறு முழு டின்கள்: ஒன்பது பாதி டின்கள்: ஆறு காலிடின்கள் இருக்கும். அப்புறமென்ன! சமமாகப் பிரித்துக் கொண்டு விடலாமே!

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: .... நண்பரின் பெயர்: ....

முகவரி: .... முகவரி: ....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்.) கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

1000/- ரூபாய் பரிசுப் போட்டி


இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. **கடைசித் தேதி 20.08.2005.**


I. பதில் என்ன?




1. இந்தப் படத்தை வரைந்தவர் யார்?
2. இவர் அரச பரம்பரையைச் சேர்ந்தவரா?
3. கேரளாவைச் சேர்ந்தவர். சரியா?
4. உலகப் புகழ் பெற்ற ஓவியரா?
5. இவருடைய ஓவியங்கள் இந்தியக் கலாசாரத்தைப் பிரதிபலிப்பவை. சரியா?

II. கோயில்களின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













பத்ரிநாத்,
மதுரை மீனாக்ஷி,
கோமதீஸ்வரர்,
பூரி, குருதுவாரா,
சூரியக் கோயில்

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


காண்டா மிருகம்

பயங்கரமானதா?

ஆழி

இது 'வெள்ளைக் காண்டா மிருகம்.' இரண்டு கொம்புகள்.

இது 'கறுப்புக் காண்டாமிருகம்.' இந்த இனத்திற்கு இரண்டு கொம்புகள். ஆப்பிரிக்காவில் இவை ஏராளமாக இருக்கின்றன. ஆனால், உலகில் மற்ற இனங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.





இந்த ஒற்றைக்கொம்பு 'ஜாவா காண்டா மிருகங்கள்' உலகில் மொத்தம் சுமார் 25 தான் இருக்கின்றன!

இந்த ஒற்றைக் கொம்பு 'இந்தியக் காண்டா மிருகங்களின் மொத்த எண்ணிக்கை 400.

உருவத்தில் மிகச் சிறிய தான 'சுமத்ரா காண்டா மிருகங்கள்' 100 தான் இருக்கின்றன!


மற்ற விலங்குகளின் கொம்புகளைப் போல் காண்டா மிருகத்தின் கொம்பு எலும்பு அல்ல. அது 'கெரட்டின்' என்னும் நார்ப் பொருளால் ஆனது.






வெட்டினாலோ, இழந்து போனாலோ காண்டாமிருகத்தின் கொம்பு மறுபடியும் முளைத்து விடுகிறது! வயதான காண்டாமிருகங் களுக்கும் அப்படித்தான்!

ஒரு காண்டாமிருகம் 4.35 மீட்டர் நீளமும், 2 மீட்டர் உயரமும், 5 டன்கள் எடையும் இருக்கும்! மணிக்குச் சுமார் 48 கி.மீ. வேகத்தில் ஓடும். தாவர உணவுதான் உண்ணும். இரவில் மட்டுமே இரை தேடப் போகும்.





காண்டா மிருகம், பார்க்கப் பயங்கரமாக இருந்தாலும் சாதுவானது. அது எதிரே வந்துவிட்டால், அதை நோக்கி உரத்த குரலில் சத்தம் போட்டால் போதும்; அது பயந்து ஓடிவிடும்!




காண்டா மிருகம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் குட்டிப் போடும். கருவுற்ற காண்டா மிருகம் குட்டிப் போடுவதற்குச் சுமார் 18 மாதங்கள் ஆகும். ஒரு தடவைக்கு ஒரு குட்டிதான். குட்டி 2 ஆண்டுகள் தாயின் பராமரிப்பில் இருக்கும். ஒரு காண்டா மிருகத்தின் ஆயுள் சுமார் 50 ஆண்டுகள்.

சில காண்டா மிருகங்களின் கொம்பு 1.5 மீ. நீளம்கூட இருக்கும்! இவற்றின் கொம்புகளுக்கு மிகுந்த மதிப்பு. கொம்பின் எடை 800 கிராம் இருந்தால் அதற்கு விலை 400 கிராம் தங்கம்!

சீனாவில், காண்டா மிருகத்தின் கொம்பை வீட்டில் வைத்திருந்தால், நோய்கள் வரமாட்டா என்று நம்புகிறார்கள்.




அதன் மாமிசம், எலும்பு, தோல், சிறுநீர் முதலிய எல்லாவற்றையுமே மருந்துப் பொருள்களாகப் பயன்படுத்துகிறார்கள்!



காண்டா மிருகத்தின் கொம்பில் தயாரிக்கப்பட்ட கோப்பையில் விஷம் கலந்த பானத்தை ஊற்றினால், அந்த விஷம் நுரைத்துக் கொண்டு வெளியே வந்து விடும் என்றும், விஷம் முறிந்து விடும் என்றும் சொல்லப்படுகிறது. சீனாவில்தான் இந்தக் கோப்பைகள் அதிகம்.

காண்டா மிருகத்தின் கொம்பில் கோப்பைகள் தயாரிக்கிறார்கள். அந்தக் கோப்பைக்கு மருத்துவ குணம் இருப்பதாகவும், அதைப் பயன்படுத்தி வந்தால் நீண்ட காலம் வாழலாம் என்றும் நம்புகிறார்கள்.





யாருடைய வேகம் அதிகம்?

I. குமார் அண்ணன். கீதா தங்கை. ஒரு நாள் அம்மா ஆளுக்குக் கொஞ்சம் மிட்டாய்கள் கொடுத்தார். எண்ணிப் பார்க்காமல் கைக்கு வந்ததை எடுத்துக் கொடுத்தார். பிறகு குமார் எண்ணிப் பார்த்தான். கீதாவும் எண்ணிப் பார்த்தாள். குமாரிடம் இருந்த மிட்டாய்களில் நாலில் ஒரு பங்கு கீதாவின் மிட்டாய்களில் மூன்றில் ஒரு பங்கு சமமாக இருந்தது. "அண்ணா, உன்னிடம் அதிகமாக இருக்கிறதே. எனக்கு ஒரே ஒரு மிட்டாய் கொடுக்க மாட்டாயா?" என்று கீதா கேட்டாள். குமார் கொடுத்தான். அப்போது இருவரிடம் இருந்த மிட்டாய்களும் சரிசமம் ஆகிவிட்டன. முதலில் அவர்களுக்கு அம்மா கொடுத்த மிட்டாய்கள் எத்தனை? குமாருக்கு எத்தனை? கீதாவுக்கு எத்தனை?

- **ஆ.கீதா,**
வேலூர்

II. 1. தொலைவில் உள்ள பொருட்களைக் காண பயன்படும் கருவி?

2. சிறிய பொருட்களைப் பெரிதாக்கிக்காட்டும் கருவி?

3. மேகம் நகரும் திசை, உயரம் அறிய பயன்படும் கருவி?

4. இதயத்துடிப்பை அறிய பயன்படும் கருவி?

5. அச்சிட்ட படங்களைத் திரையில் விழச் செய்யும் கருவி?

- **வீ. பெரியசாமி,**
தேளூர்

III. 1.பத்துக்குள் ஓர் எண். அதை எட்டு முறை பயன்படுத்தி கூட்டல் மூலம் 250 விடை கிடைக்கும். எப்படி?

2. இரண்டு ஸ்தானமுள்ள ஓர் எண். அதிலிருந்து ஒன்பதைக் கழித்தால் அது தலைகீழாக மாறும். அந்த எண் எது?


- **சு. கண்ணகி,**
மிட்டூர்.

IV. ஒருவருக்கு நான்கு பிள்ளைகள். அந்த நான்கு பேரின் வயதைக் கூட்டினால் 36 வரும். மூத்த மகனின் வயதை இரண்டால் வகுத்தாலும் இரண்டாவது மகனின் வயதிலிருந்து இரண்டைக் கழித்தாலும் மூன்றாவது மகனின் வயதுடன் இரண்டைக் கூட்டினாலும், நான்காமவனின் வயதை இரண்டால் பெருக்கினாலும் ஒரே விடையே வரும். அப்படியானால் நான்கு பேரின் வயதும் தனித்தனியே எவ்வளவு?

- நெ.இராமன், சென்னை



V. கீழே உள்ள படத்தில் மொத்தமாக 24 கோடுகள் உள்ளன. அதில் 8 கோடுகளை நீக்கிவிட்டால் மீதம் இரண்டு சதுரங்கள் மட்டுமே இருக்க வேண்டும். அப்படி கிடைக்கும் இரண்டு சதுரங்களைத் தவிர வேறு எந்த ஒரு கோடோ



அல்லது சதுரமோ மீதம் இருக்கக் கூடாது. அப்படியானால் எந்த எட்டுக் கோடுகளை நீக்குவீர்கள்?

- பா.பிரேம்குமார்
ஒன்பதாம் வகுப்பு,
சிவபாக்கியம் முத்துசாமி
மெட்ரிகுலேசன் பள்ளி,
மாதேசம்பாளையம்.

VI. பத்து கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு சாலையின் 10வது கி.மீ கல்லில் இருந்து 5வது கி.மீ. கல் இருக்கும் தொலைவை கலா ஒரு மணி நேரத்தில் கடந்தாள்.

அதே சாலையின் 1வது கி.மீ. கல்லில் தொடங்கி 5வது கி.மீ. கல் இருக்கும் தொலைவை மாலா ஒரு மணி நேரத்தில் கடந்தாள். யாருடைய வேகம் அதிகம்?

- குட்டி பிரசன்னா, கரூர்

VII. 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999 இந்த எண்களை ஓர் எண் மிச்சம் இல்லாமல் வகுக்கும். ஆனால் அந்த எண்ணை, வேறு எந்த எண்ணாலும் மிச்சம் இல்லாமல் வகுக்க முடியாது. அந்த வினோத எண் என்ன?

- பாலு, சென்னை

புதிர் உலகம் விடைகள்


I. மொத்தம் : 14
குமாருக்கு 8 மிட்டாய்;
கீதாவுக்கு 6 மிட்டாய்

II. 1. டெலஸ்கோப்
2. மைக்ராஸ்கோப்
3. நீபோஸ்கோப்
4. ஸ்டெதஸ்கோப்
5. எபிடாஸ்கோப்

III. 1. 222+22+2+2+2=250
2. பல எண்கள் சொல்ல லாம். 21,32,43,54,65,76

IV. நால்வரின் வயது முறையே 16,10,6,4

V.




VI. விடை: கீதாவின் வேகமே அதிகம். ஏனெனில் கீதா ஒரு மணிநேரத்தில் 6 கி.மீ. தொலைவையும் மாலா ஒரு மணி நேரத்தில் 5 கி.மீ. தொலைவையும் கடக்கின்ற னர்.

VII. 37

குறுக்கெழுத்துப் புதிர் விடை





காந்தலக்ஷ்மி சந்திரமௌலி

"வணக்கம். 'சென்னை-குவைத்-கெய்ரோ' செல்லும் ஃபிளைட் இன்னும் சிறிது நேரத்தில் கிளம்ப உள்ளது" என்று விமானப் பணிப் பெண்ணின் இனிமையான குரல் ஒலிபெருக்கி மூலமாகத் தெளிவாகக் கேட்டது.

'இருக்கை பெல்ட்' அணியும் முறையும், ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கான பாதுகாப்பு முறையையும் விமானப் பணியாளர் விளக்கினார். முதல் முறையாக செல்லும் வெளிநாட்டுப் பயணம் என்பதால் ராஜுவும் ராதிகாவும் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டனர்.

"பாவம் அகிலா, அவளை விட்டுப் போக மனம் வரவில்லை" என்று ராதிகா சொன்னாள். உடனே ராஜு, "பார் ராதிகா, 'தொண தொண'ன்னு பேசாமல், புத்தகத்தைப் படிக்கலாமே" என்றான். "பாரும்மா, நான் தொண-தொண'ன்னு பேசுறேனாம். இவர் பெரிய விஞ்ஞானி. படித்து பட்டம் பெற்று, நாட்டைக் காக்கப் போறாரு" என்றாள் ராதிகா.

"ஆமாம், நான் பெரிய விஞ்ஞானியாகி நாட்டைக் காப்பது மட்டுமல்ல, ஆளவும் போகிறேன். நம் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் போல!" என்றான் ராஜு.

"சபாஷ் ராஜு. நீ சிறு பையனாக இருந்தாலும் உன் எண்ணங்கள் உயர்வாக உள்ளன" என்று பின் இருக்கையிலிருந்து யாரோ கூறினார்கள். ராஜுவும் ராதிகாவும் எழுந்து நின்று பார்த்து திகைத்தனர். "என்ன திகைச்சுப் போய் பார்க்கறீங்க? நானும் கெய்ரோ நகரத்திற்கு தான் வருகிறேன்" என்றார் அக்பர்!

"சார் வணக்கம்! எப்படியிருக்கீங்க? ராதிகாவின் புத்தகங்களைப் படித்து முடித்து விட்டீர்களா?" என்று விமலா கிண்டலாகக் கேட்டார்.

"அம்மா,



4

என்னை மன்னிச்சிடுங்க. அது என் பை என்று நினைத்து எடுத்துச் சென்று விட்டேன். உங்கள் முகவரி என்னிடம் இல்லாததால் உடனே திருப்பிக் கொடுக்க முடியவில்லை. இதோ உங்கள் பை'' என்று பையை விமலாவிடம் கொடுத்தார்.

''என்னை மன்னிக்க வேண்டும். உங்களைத் தவறாக நினைத்து விட்டேன். ராஜு போய் சாரிடம் உட்கார்ந்து கொள். உனக்கு எகிப்து நாட்டைப் பற்றிய விவரங்களை அவர் சொல்வார்'' என்று விமலா கூறினார். 'வேண்டாம்' என்று ராஜு பல முறை மறுத்தும் கேளாமல் அக்பரின் அருகில் உட்கார வைக்கப்பட்டான்.

''ராஜு, என்னிடமிருந்து யாரும் தப்ப முடியாது'' என்று அக்பர் சிரித்தார். ''நான் என்ன புத்தகத் திருடனா? எனக்கு என்ன பயம்?'' என்று ராஜு கேட்டான். ''நீ புத்திசாலி மட்டுமல்ல,, நல்ல தைரியசாலியும் கூட'' என்றார் அக்பர்.

''அது சரி, என் புத்தகம் எங்கே?'' என்று கடுமையாகக் கேட்டார் அக்பர். ''ஆரம்பித்து விட்டீர்களா? அது என் புத்தகம்'' என்றான் ராஜு. ''எகிப்து என் நாடு. கெய்ரோ என் நகரம். அங்கு நீ தப்பவே முடியாது'' என்றார் அக்பர். ''நாங்கள் தங்கப்போவது அலெக்ஸாந்த்ரியா நகரம்'' என்றான் ராஜு. ''அதனாலென்ன, நீ எங்கு சென்றாலும் அந்தப் புத்தகத்தை உன்னிடமிருந்து வாங்காமல் விட மாட்டேன்'' என்றார் அக்பர்.

ராஜுவுக்குத் தலை சுற்றியது. ''அம்மா, எனக்கு உடம்பு சரியாக இல்லை. உடனே விமானப் பணிப் பெண்ணைக் கூப்பிடுங்கள்'' என்றான் ராஜு. அடுத்த நொடி விமான பணிப் பெண் அங்கு வந்து, ராஜுவை வேறு இருக்கையில் படுக்க



மர்மப் புத்தகம்!

வைத்தாள். தண்ணீர் கொடுத்து அருகிலேயே அமர்ந்து கவனித்துக் கொண்டாள். ராதிகா, ''மிஸ், யாரும் என் தம்பியைத் தொந்திரவு செய்ய வேண்டாம். அவனுக்குத் தலைச் சுற்றல் அதிகமாகி



விடும்'' என்றாள்.

குவைத் விமான நிலையத்தில் விமானம் நின்றாலும் பயணிகள் இறங்க அனுமதியில்லை. பிறகு கெய்ரோ நகரத்தை அடையும் பொழுது, புது நாட்டையும் அப்பாவையும் பார்க்கும் மகிழ்ச்சியில் மூவரும் இருந்தனர். தத்தம் உடைமைகளை எடுத்துக் கொண்டு சுங்க இலாகா சோதனைச் சாவடிக்குச் சென்றனர். ராஜுவைப் பார்த்த உடனே அவனுடைய பெட்டியையும் பையையும் தீவிரமாகச் சோதனை செய்தார்கள். ஒவ்வொரு புத்தகமாகப் பிரித்துப் பார்த்தனர். விமலா திடுக்கிட்டு ''என்ன இது? ஒரு குழந்தையின் புத்தகங்களை இப்படியா சோதனை செய்வது?'' என்று சிறிது கோபத்துடன் கேட்டார்.

''சில முக்கியமான புத்தகங்களைக் கடத்துவதாக எங்களுக்குத் தகவல் வந்துள்ளது. இதோ சோதனை இப்பொழுது முடிந்துவிடும்'' என்று எகிப்து நாட்டு அதிகாரிகள் சமாதானப்படுத்தினர். வெளியில் வந்த உடனே சங்கரன் ராஜுவையும் ராதிகாவையும் வாரி அணைத்துக் கொண்டார். விடுதியில் தங்கி, எல்லோரும் சேர்ந்து கெய்ரோ நகரத்தைச் சுற்றிப் பார்க்கத் துவங்கினார்கள்.

''முதலில் 'பிரமிடுகள்'தான் பார்க்க வேண்டும்''என்றான் ராஜு.

''எப்படியப்பா, மணலில் இத்தனை பெரிய பிரமிடுகளைக் கட்டினர்?''- ராஜு கேட்டான்.

''உன்னுடைய 'எகிப்து நாட்டு மர்மங்கள்' புத்தகத்தில் எல்லா விவரங்களும் உள்ளன. அடிமைகள் மிகப் பெரிய கற்களை உருட்டிக் கொண்டு வந்து கட்டிய பிரம்மாண்டமான கட்டடம் இது. ஒவ்வொரு பிரமிடுக்குள்ளும் 'மம்மிகள்' எனப்படும் மன்னர்களின் சவப்பெட்டிகள், அதற்குள் இருக்கும் ஏராளமான தங்கம், வைரம் போன்ற விலை மதிப்பற்ற சொத்துகள் என்று எகிப்து நாட்டின் மிகப்பெரிய பொக்கிஷங்கள் இதில் இருந்தன. அவற்றில் சில

செல்வங்கள் கொள்ளை போய் விட்டன என்றாலும், பல இன்று கெய்ரோ அருங்காட்சியகத்தில் உள்ளன'' என்று சங்கரன் விவரங்களைக் கூறினார்.

உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிடுகளை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். ''உள்ளே ஒரு வழிகாட்டி நம்மை அழைத்துச் செல்வார். சிறிது மூச்சுத் திணறல் ஏற்படலாம். கவலைப்பட வேண்டாம். ஜாக்கிரதை'' என்றார் சங்கரன். எல்லோரும் மிகக் குறுகிய வாயிலுடைய பிரமிடின் உள்ளே சென்றனர். மங்கலான வெளிச்சத்தில் மரப் பலகையாலான படிக்கட்டுகளின் மேலே ஏறினர்.

''என்ன ராஜு, புத்தகத்தில் படித்தது போல உள்ளதா?'' என்று அக்பரின் குரல் காதருகில் கேட்க, திகைத்து நின்றான் ராஜு. ராதிகா உடனே ''அப்பா, இங்கே வாங்க'' என்று குரல் கொடுக்க வந்திருந்த நிறைய வெளிநாட்டுப் பயணிகள் திரும்பிப் பார்த்தனர்.

சங்கரன் ''ஹலோ, மிஸ்டர் அக்பர்! எப்படியிருக்கிறீர்கள்? புத்தகத்தால் வந்த குழப்பத்தைப் பற்றி என் மனைவி கூறினார்'' என்று அக்பரின் கையைக் குலுக்கினார். அக்பர் சிரித்தபடி ''ஹலோ! நீங்கள் அனைவரும் எகிப்து நாட்டிற்கு விருந்தாளியாக வந்ததற்கு மிக்க நன்றி. ஏனோ தெரியவில்லை, உங்கள் குழந்தைகள் என்னைப் பார்த்தாலே பயப்படுகின்றனர். நான் என்ன எகிப்து 'மம்மி'யைப் போலவா இருக்கிறேன்?'' என்றார் அக்பர்.

ராதிகா உடனே, ''அப்பா, வெளியில் போகலாம்பா. மூச்சு முட்டுது'' என்றாள். எல்லோரும் வெளியில் வந்தனர். அப்பொழுது அக்பர் இரு அரேபியர்களைக் காண்பித்து சங்கரனிடம் கூறினார். ''இவர்கள் என் நண்பர்கள். உங்களுக்கு எங்கள் நாட்டின் அனைத்து இடங்களையும் காண்பித்து, உதவி புரிய தயாராக உள்ளனர்'' என்றார்.

ஆறடிக்கும் மேல் உயரம், பருத்த உடல், பெரிய மீசை, தாடியுடன் அரேபிய உடையில் இருக்கும் இருவரையும் ராஜுவும் ராதிகாவும் பயத்துடன் பார்த்தனர்.

(தொடரும்)



''நாட்டு மருந்து சாப்பிட்டா உங்க வியாதி தீர்ந்திடும்.''
''ரொம்ப தேங்க்ஸ். எந்த நாட்டோட மருந்து டாக்டர்?''
ஆர். தர்ஷனா, செஞ்சி



பயன்படுத்த ஆரம்பித்தனர். மற்ற நாடுகளும் வட்ட வடிவ நாணயத்துக்கு மாறினர். நம் நாட்டில் ராமாயணம், மகாபாரதம் காலத்திலேயே நாணயம் இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆண்ட போது 1835ல் கல்கத்தாவில் நாணயம் தயாரித்தனர். நாடு சுதந்திரம் அடைந்த பின்பு அசோக ஸ்தூபி பொறிக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டில் காலணா, அரையணா முறை

● ஆர். ராகசுதா,
செம்பரம்பாக்கம்

? நாணயம் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது ஜக்கு?

கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே லிபியா, சீனா, இந்தியா ஆகிய



நாடுகளில் வாழ்ந்த மக்கள், பொருட்களை வாங்குவதற்கு உலோகத்துண்டுகளை நாணயமாகப் பயன்படுத்தினர். இந்த உலோகத்துண்டுகள் சிலவற்றில் அடையாளக் குறியீடுகள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த நாணயங்கள் வட்டம், சதுரம், முக்கோணம் என பலவடிவங்களில் இருந்தன. கி.மு. 300ல் சீனர்கள் வட்ட வடிவிலான நாணயங்களை மட்டுமே

ஜக்கு

ஒழிக்கப்பட்டு நூறு பைசா கொண்டது ஒரு ரூபாய் என்று கணக்கிடப்பட்டது. மும்பை, கல்கத்தா மற்றும் ஹைதராபாத் நகரங்களில் நாணயங்கள் தயாரிக்கப்படுகின்றன.

● என்.கீர்த்தனா, நாகூர்

? கிரிக்கெட்டின் தாயகம் எது ஜக்கு?

இங்கிலாந்து தான் கிரிக்கெட்



பிறந்த இடம் கீர்த்தனா.

● எம்.அமீர்ஜான்,
அரும்பாக்கம்

? கிரிக்கெட் மட்டை எப்போது உருவாக்கப்பட்டது ஜக்கு?

கிரிக்கெட் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆடப்பட்ட விளையாட்டு. ஆனால் இன்றைய மட்டை 1853ஆம் ஆண்டில்தான் உருவாக்கப்பட்டது. வில்லோ மரத்தில் ரப்பர் கைப்பிடியுடன் இது உருவாக்கப்பட்டது அமீர் ஜான்.

அன்புள்ள ஜக்கு...



வலி தெரியுமா?



● கே.வி.வாசுகி, குற்றாலம்

? சென்னை வெய்யில் ரொம்பவே கஷ்டமா இருக்குமே! குற்றாலம் வந்தால் குளிர்ச்சியாகவும் இருக்கலாம், உன் உறவினர்களைப் பார்த்த மாதிரியும் இருக்குமே ஜக்கு?

நான் ஏற்கெனவே பல முறை குற்றாலத்திற்கு வந்திருக்கிறேன்; என் உறவினர்களையும் பார்த்திருக்கிறேன். எனக்கு மிகவும் பிடித்த இடங்களில் குற்றாலமும் ஒன்று. எனக்குப் பிடித்த இடத்தையும் என் உறவினர்களையும் நினைவில் வைத்து அழைத்ததற்கு நன்றி வாசுகி.

● வே.சுபஸ்ரீ, நல்லூர்

? மனிதர்களை அடித்தால் வலிக்கிறது. ஆனால் 'ஈ'க்களை அடித்தால் மட்டும் வலி தெரியாமல் பறக்கிறதே, எப்படி ஜக்கு?

ஈ மேல் உங்கள் அடி சரியாகப் பட்டிருக்காது சுபஸ்ரீ. அது சரி, நோய் பரப்பும் ஈக்களை ஏன் அடித்து விளையாடுறீங்க? ஈக்கள் வராமல் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள் சுபஸ்ரீ.

காந்திஜி நடத்திய ஏலம்!

இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரமாக இருந்த காலம் அது. ஈரோடுக்கு வருகை புரிந்தபோது கொடுமுடியில் கே.பி.சுந்தராம்பாளை காந்திஜி சந்திக்க நேரிட்டது. அப்போது காந்திஜிக்கு சுந்தராம்பாள் வீட்டில் மதிய உணவிற்கு ஏற்பாடு செய்திருந்தார் மாகாண போராட்டக் குழுவின் தலைவர் சத்யமூர்த்தி.

சுந்தராம்பாள் காந்திஜியை வரவேற்று தங்கத் தட்டு ஒன்றில் உணவு பரிமாறினார். உணவை முடித்துக் கொண்ட காந்திஜி, "எனக்குச் சாப்பாடு மட்டும்தானா? தட்டு இல்லையா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டார். உடனே தட்டைச் சுத்தப்படுத்தி காந்திஜியிடம் வழங்கினார் சுந்தராம்பாள். தட்டை அவ்விடத்திலேயே ஏலத்தில் விட்டு கிடைத்த பணத்தை விடுதலைப் போராட்ட நிதிக்கு அளித்துவிட்டார் காந்திஜி!

- எஸ்.பக்கிரிசாமி,
திருவாரூர்



• டால்ஸ்டாய்



• லெனின்

பணமில்லை...

டால்ஸ்டாய் ஒரு சமயம் நகரத் தெருக்களில் உலாவச் சென்றார். அப்பொழுது பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம் தர்மம் கேட்டான். டால்ஸ்டாய் மணிபர்சை எடுப்பதற்காக தன் கோட் பைக்குள் கைவிட்ட பொழுதுதான் அதை மறந்து வீட்டிலேயே வைத்துவிட்டு வந்தது ஞாபகத்திற்கு வந்தது.

எனவே, அவர் பிச்சைக்காரனிடம் சங்கோஜப்பட்டுக் கொண்டே, ''சாரி பிரதர், என்னிடம் காசில்லை'' என்றார். அதற்கு அந்தப் பிச்சைக்காரன் ''நீங்கள் மிகவும் உயர்ந்தவர். இருந்தாலும் ஏழையான என்னை பிரதர் என்று கூப்பிட்டீர்கள். இதுவே எனக்குப் போதும். காசு கொடுக்காதது பற்றி எனக்கு வருத்தமில்லை'' என்றான்.

- மியூரியல் உஷா,
மதுரை

காந்தி நடத்திய

பிரபலங்களின் வாழ்வில்

ஒரு மூலை...

சீனத் தத்துவமேதை கன்பூஷியஸ் தம்மிடம் அறிவில் குறைந்தவரோ அல்லது அறிவு ஆசை அல்லாதவர்களோ சீடராக வந்தால் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க ஒப்புக் கொள்ள மாட்டார். ஏன் என்று கேட்டால், "நான் மாணவருக்கு விஷயத்தின் ஒரு மூலையைத் தான் காட்டுவேன்! மற்ற மூன்று மூலைகளையும் அவனே தான் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும்" என்பார்.

-ஜி.கே.எஸ். மூர்த்தி,
கோபிசெட்டிப்பாளையம்

* கன்பூஷியஸ்



மோசமான போதை!

தன்னைப் பற்றி பிறர் அதிகமாகப் புகழ்ந்து பேசுவதை விரும்பாதவர் லெனின். ஒருமுறை அவருடைய பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாட விரும்பிய நண்பர்கள் விழாவில் கலந்து கொள்ள வருமாறு லெனினை வற்புறுத்தி அழைத்தனர். முதலில் மறுத்தவர் இறுதியில் ஒப்புக் கொண்டார்.

கூட்டம் ஆரம்பமானது. பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்து லெனினைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசினர். ஆனால் லெனின் மட்டும் வரவேயில்லை. சொற்பொழிவுகளெல்லாம் முடிந்துவிட்டன என்று தெரிந்த பின்னர் அவர் வந்தார். கூட்டத்தினர் ஆரவாரத்துடன் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார். அப்போது லெனின், "இவ்வளவு நேரம் நிகழ்த்தப்பட்ட பேச்சுகளையெல்லாம் கேட்காமலிருக்க என்னை அனுமதித்ததற்காக நன்றி. ஏனெனில் புகழ்ச்சி ஒரு மோசமான போதை" என்றார்.

- விசாகன்,
இராஜபாளையம்



* காந்தி

ஏலம்!



பாரதி தேவராஜ்

3 கேள்விகள்!

ராஜப் பிரதானிகள், மந்திரிகள், புலவர்கள், அரசவைக் கவிஞர் என அனைவரும் அரசவையில் அமர்ந்திருக்க, அரசர் நடுநாயகமாய் வீற்றிருந்தார்.

அரசர் அனைவரையும் பார்த்து, "என்னுள் எழுந்துள்ள இந்த மூன்று கேள்விகளை எல்லோரும் கேளுங்கள். பதில் எனக்குத் தேவை" என்றார்.

"கேள்வி என்ன அரசே?" என்றனர்.

"கடவுள் எங்கே இருக்கிறார்? எந்தத் திசை நோக்கி கடவுள் இருக்கிறார்? கடவுள் என்ன செய்கிறார்? இதுதான் என்னுள் எழுந்துள்ள மூன்று கேள்விகள். பதில் சொல்லுங்கள்" என்றார்.

ராஜப்பிரதானிகள் முகம் சுழித்தபடி மந்திரிகளைப் பார்க்க, மந்திரிகள் "ராஜாங்க விஷயத்திற்குப் பதில் சொல்லலாம். இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல புலவர்களே ஏற்றவர்கள்" என்று புலவர்களை நோக்க, ஒருவரை ஒருவர் புலவர்கள் பார்த்து என்ன பதில் சொல்வது என்று பரிதவித்தனர்.

இறுதியாக மன்னர், "அரசவை தலைமை கவிஞரே! நீர்தான் இதற்கான சமாதானத்தைச் சொல்ல வேண்டும். உங்களுக்கு வேண்டிய அவகாசமளிக்கிறேன். இன்னும் ஐந்து நாட்களில் பதிலைச் சொல்லியாக வேண்டும். இல்லையென்றால் உம் பதவி பறிபோய் விடும். இத்துடன் சபை கலையலாம்" என்று கூறி மன்னர் எழுந்து சென்று விட்டார். எல்லோரும் கலைந்து சென்றனர். அரசவை கவிஞர் மட்டும் மனதில் திகில் பரவ சோகமாக வீடு வந்து சேர்ந்தார்.


அவருக்கு ஒரே மகள். பத்து வயது நிறைந்தவள். அப்பாவைக் கண்டதும் பதறிப் போனாள். ஒரு நாளும் இப்படி

அவர் சோகத்தோடு வந்ததே இல்லை.

''என்னப்பா ஏன் இந்தச் சோகம்?'' என்றாள்.

கவிஞர் அரசவையில் நடந்ததைக் கூறினார்.

''இவ்வளவுதானா! இந்தக் கேள்விகளுக்கு



என்னால் பதில் சொல்ல முடியும். அரசரின் அழைப்பு வரட்டும், நானே சென்று பதில் சொல்கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்றாள்.

ஐந்து நாள் கெடு முடிந்தது. அரசவைக்கு சிறுமி சென்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு, ''மன்னரின் சந்தேகங்களுக்கு நானே பதில் சொல்ல வந்திருக்கிறேன்''என்றாள்.

சபையினர் அனைவருக்கும் ஒரே ஆச்சர்யம். இருப்பினும் அந்தப் பெண் என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலோடு காத்திருந்தனர்.

மன்னரிடம் அந்தப் பெண்,

''மகாப்பிரபு வணக்கம். தங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வந்திருக்கிறேன். உங்களுக்குத் தெரியாத ஒன்றை நான் சொல்ல வந்திருப்பதால் நான் குருவாகிறேன். கேட்கிற நீங்கள் சிஷ்யராகிறீர்கள், சரியா?'' என்றாள்.

''சரி'' என்றார் மன்னர்.

''அப்படியானால் நீங்கள் நிற்க நான் அமர்ந்து கொள்வதுதானே முறை?'' என்றாள். அரசர் ஒப்புக் கொண்டு இருக்கையிலிருந்து எழுந்து அந்தச் சிறுமியை ஆசனத்தில் அமரச் செய்தார்.

''இப்போது உங்கள் முதல் கேள்வியைச் சொல்லுங்கள்'' என்றாள்.

அரசர் ''கடவுள் எங்கே இருக்கிறார்?'' என்றார்.

ஒரு கிண்ணத்தில் பால் கொண்டு வரச் சொன்னாள்.

கிண்ணத்தில் பால் வந்தது.

''அரசே, கிண்ணத்தில் உள்ள பாலில் வெண்ணெய் இருக்கிறது. உங்களால் இப்போதே எடுத்துத்தர முடியுமா?'' என்று கேட்டாள்.


''அது எப்படி முடியும்? பால் தயிராகி, தயிரைக் கடைந்தால்தானே வெண்ணெய் எடுக்க முடியும்!''

''இது கடவுள் விஷயத்துக்கும் பொருந்தும்தானே! ஜீவாத்மா பரமாத்மாவை நோக்கி பக்தி என்னும் அன்பைச் செலுத்தி தவமிருந்தால் கடவுள் தரிசனம் பெறலாம். கடவுள் எங்கும் இருக்கிறார், சரிதானே?''

''சரிதான்''- மன்னருக்கு சமாதானம் பிறந்தது.

''சரி, இரண்டாவது

யார் இந்தப் பிரபலம்?



கி.பி.1893ல் பிறந்து 1976ல் இறந்தவர்.

கேள்வி?"

"கடவுள் எந்தத் திசையை நோக்கிப் பார்க்கிறார்?"

விளக்கு எடுத்துவரச் சொன்னாள் சிறுமி. விளக்கு எடுத்து வரப்பட்டது. அதில் ஒளி ஏற்றப்பட்டது.

"அரசே, இந்த ஒளி எந்தத் திசையைப் பார்த்து ஒளிர்கிறது? எல்லாத்திசையையும் நோக்கி ஒளி வீசுவதைப் போல, கடவுள் எல்லாத் திசையையும் பார்க்கிறார் சரியா?"

அரசருக்குப் பூர்ண திருப்தி ஏற்பட்டது.

"மன்னர் பெருமானே, மூன்றாவது கேள்வி என்ன?"

"கடவுள் என்ன செய்து கொண்டிருக்கிறார்?"

"இந்த அவைக்கு வரும் வரை நீங்கள் அரியாசனத்தில் அமர்ந்திருந்தீர்கள். நான் வந்து இங்கே உங்கள் சந்தேகங்களைக் களைய என்னை குருவாக ஏற்று அதே அரியாசனத்தில் என்னை அமர வைத்து தாங்கள் நிற்கிறீர்கள். இதைத்தான் கடவுள் செய்கிறார்" என்றாள் சிறுமி.

மன்னரின் எல்லா சந்தேகங்களும் தீர்ந்தன. அச்சிறுமியையும் அரசவைக் கவிஞரையும் வெகுவாகப் புகழ்ந்து பல பரிசுகளைத் தந்தார்.

யாருக்குப் பிறந்த நாள்?



விடுகதைப் பக்கம்







ஒரு தலைக்கு இரண்டு தலைப்பாகை!

I. 1. ஒரு தலைக்கு இரண்டு தலைப்பாகை - அது என்ன?

2. பச்சை பங்களா, வெள்ளை காமிரா, குட்டி தூங்கறா - அது என்ன?

3. ஓட்டுத் திண்ணையிலே ஒளி விடும் ஒரு கல் - அது என்ன?

- பி. பவ்யா, நான்காம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

II. 1. வெள்ளை மாளிகைக்கு வழியும் இல்லை, வாசலும் இல்லை - அது என்ன?

2. தண்ணீரில் உருவானவன் தண்ணீரிலேயே கரைந்தான் - அவன் யார்?

3. அடைபடுவான், ஆனால் பிடிபட மாட்டான் - அவன் யார்?

- பி. பாரதி, ஆரணி

III. 1.ஆட்டத்தில் கெட்டிக்காரன், பாம்புக்குப் பரம எதிரி - அவன் யார்?

2. தண்ணீரிலும் இருப்பான், தரையிலும் இருப்பான், தாவி குதிப்பதில் கெட்டிக்காரன் அவன் யார்?

3. உயிரில்லாதவன், கயிற்றுக்கு மட்டும் ஆடுவான் - அவன் யார்?

- ஜி. செல்வராஜன் மயிலாடுதுறை

IV. 1. குழியிலே புலி, வெளியிலே எலி - அது என்ன?

2. நின்றாலும் நடந்தாலும் கூடவே வருவான் கறுப்புப் பூனை அவன் யார்?

3. கலகலப்பில் கல்யாண வீடு, பரந்து கிடப்பதில் சஹாரா பாலைவனம், ஆக்கலும் அழித்தலும் அவன் கை வந்த கலை, கோடானுகோடி உயிர் அவன் கையில் - யார் அவன்?

- ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

விடைகள்:

I. 1. பட்டாணி 2. மாங்காய் 3. மூக்குத்தி

II. 1. முட்டை 2. உப்பு 3.காற்று

III. 1. மயில் 2. தவளை 3. பம்பரம்

IV. 1. நண்டு 2. நிழல் 3.கடல்

சாதனை

மேஜிக் கீர்த்தனா!

'ஹலோ எவ்ரிபடி, ஐ ஆம் 'கீர்த்தனா' என்றபடி மேஜிக் கோலை வைத்து 'ஜீ...பூம்பா' ஓதி கீர்த்தனா மேஜிக் பண்ணும் அழகை நாள் முழுவதும் ரசிக்கலாம்.







ஒன்பது வயதாகும் நான்காம் வகுப்பு மாணவியான கீர்த்தனா தான் இன்றைய தேதியில் தமிழ்நாட்டின் இளம் மாஜிச் நிபுணர்.

கீர்த்தனாவுக்கு மட்டும் மேஜிக் மேல அப்படி என்ன ப்ரியம்?

நான் இப்போ எப்படி நல்லா மேஜிக்

பண்றனோ அதே மாதிரி சின்ன வயசிலிருந்தே நான் நல்லா வரைவேன். இன்டர் ஸ்கூல் போட்டிகள்ல நிறையப் பரிசு வாங்கியிருக்கேன். அப்போ, ஒரு போட்டியில நானும் ஒரு பையனும் சரிசமமா பரிசு வாங்கி னோம். ஆனா அவன் தனக்குத் தெரிஞ்ச மேஜிக்கை எல்லோ ருக்கும் பண்ணிக்காட்ட, எனக்கு ஒரு மாதிரி ஆயிருச்சு. நானும் மேஜிக் கத்துகிட்டு இதே மாதிரி அசத்தணும்னு அப்பா, அம்மாகிட்ட சொன் னேன். அவங்க உடனே மேஜிக் க்ளாஸ்ல சேர்த்து விட்டாங்க.


"ஒரு டப்பாவுக்குள்ள சாக்லேட் காகிதங்கள் போடு வேன். மந்திரக்கோலால ஜீபூம்பா சொல்லி முடிச்சா அதிலிருந்து சாக்லெட்கள் கொட்டும். இது எப்படின்னா... அந்த டப்பாவுக்குள்ளேயே இன்னொரு டப்பாவும் இருக் கும். அதுலதான் சாக்லெட் ஒளிஞ்சிட்டு இருக்கும். பேசிக் கிட்டே யாருக்கும் தெரியாம

மேஜிக் தந்திரங்களெல்லாம் என்னென்ன தெரியும்?

திடீர்னு உங்க முன்னாடி சாக்லேட், ஃப்ளவர்ஸ் எல்லாம் வரவழைப்பேன் தெரியுமா? கயிற்றைக் குச்சியாக்குவேன். இது மாதிரி நிறைய ட்ரிக்ஸ் கைவசம் வச்சிருக்கேன். இதெல் லாம் ஆறே மாசத்துல நல்லா கத்துக்கிட்டு நிறைய மேடை நிகழ்ச்சிகள்ல மேஜிக் பண்ணிக் காண்பிச்சிருக்கேன். என் நிகழ்ச்சியைப் பார்த்துட்டு மத்த ஊர்களுக்கு வரச் சொல்லி நிறையப் பேர் கூப்பிட்டாங்க. ஆனா படிப்பு பாதிக்கும்னு சென்னையில மட்டும்தான் ஷோ பண்றேன்.

இதுக்காக பரிசுகள் கிடைச்சி ருக்கா?

நிறைய்ய... தமிழ் நாட்டோட இளம் மேஜிக் நிபுணர் நான் தான். போன வருஷம் அகில இந்திய அளவுல நடந்த பார்லே-ஜி ஸ்காலர்ஷிப் அவார்டை விஸ்வநாதன் ஆனந்த் கையால நான் வாங்கி யிருக்கேன். ஆயிரத்துக்கும் மேல அதுல கலந்து கிட்டாங்க. சென்னையி லிருந்து ஜெயிச்ச மூணு பேர்ல நானும் ஒருத்தி.



வேறென்ன திறமை கள் இருக்கு?

நல்லா வரைவேன்.

நகத்து நுனியால சட்டுனு இன்னொரு டப்பாவை மேலே இழுத்திடணும். இது சொல்ற துக்கு ஈஸியா இருந்தாலும் செய்யறது ரொம்பக் கஷ்டம். ஆனாலும் ஆர்வமும் முயற்சியும் இருந்தா எல்லோராலும் மேஜிக்கை கற்றுக் கொள்ள முடியும்'' என்றார் கீர்த்தனா.



சம்மர் கேம்புல என்னை விட பெரியவங்களுக்கெல்லாம் ட்ராயிங் க்ளாஸ் எடுத்திருக்கேன். ட்ரினிட்டி கல்லூரியில (லண்டன்) கீபோர்டு கத்துக்கிட்டு 'டிஸ்டிங்ஷன்'ல பாஸ் பண்ணியிருக்கேன். ஸ்கூல்ல தமிழ், ஆங்கிலப் பேச்சு போட்டிகள்ல கலந்துக்குவேன். பாட்டு க்ளாஸ் போறேன். எனக்கு 'கணக்கு' பாடம் பிடிக்கும்கிறதால Advanced Maths கத்துக்கிறேன். 'TOETUL' இங்க்லீஷ் க்ளாஸ் போறேன். அதோட க்ளாஸ்ல நான் தான் எப்பவும் முதலா வருவேன். எப்பவும் 100% மதிப்பெண்கள் தான் எடுப்பேன்.

எதிர்காலத்துல என்னவாகப் போறீங்க?

நாங்க மைலாப்பூர் பக்கம் இருக்கிறதால சமீபத்துல 'சுனாமி' வந்தப்போ ரொம்பவும் பயந்து போயிட்டோம். இது மாதிரி தமிழ்நாடு முழுக்க 'சுனாமி'யால எல்லோரும் பயந்து போனதால, 'Space Reserch' பண்ணி இயற்கை சீற்றங்களை முன் கூட்டியே கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்யணும். அப்புறம் டாக்டர் ஆகணும். அதுவும் ப்ரெயின் ஸ்பெஷலிஸ்டாகணும்.

கூட்டத்தின் முன்பு தைரியமாகப் பேச எப்படி முடிகிறது?

எனக்கு எப்பவும் மேடையேறதுக்கு பயமே இருந்ததில்லை. ஸ்கூல்ல நிறையப் பேச்சு போட்டிகள்ல கலந்திருக்கேன். அதோட எங்க ஸ்கூல்ல எந்த விழாவானாலும் நான் தான் காம்பியரா இருப்பேன்.

மற்றவர்களின் மேஜிக் நிகழ்ச்சிகளுக்குச் செல்வதுண்டா?

சென்னையில் எந்த மேஜிக் ஷோ நடந்தாலும் தவறாம போயிடுவேன். எனக்குப் பிடிச்ச மேஜிசியன் ஜூனியர் பி.சி. சர்க்கார்தான்.

- ச.ந. கண்ணன்

படங்கள்: **ஸ்ரீஹரி**

கொ.மா.கோதண்டம்



ஆர்த்தி செய்த வைத்தியம்!

பூங்குன்றன், கம்பராமன், பூங்கோதை இவர்களுடன் ஆர்த்தியும் திவாகரும் மலையடி வாரம் சென்றனர்.

ஆதிவாசிகள் குடியிருப்பு அருகே நீலனை விசாரித்ததில் அவன் யானைப் பாறை பக்கம் தேனெடுக்கப் போயுள்ளதாகக் கூறினார்கள்.

சிறுவன் ஒருவன் அழைத்து வந்து தூரத்திலிருந்து நீலனைக் காட்டி விட்டு ஓடியே போய் விட்டான்.

பெருமரங்கள் அடர்ந்த வனத்தின் ஒற்றையடிப் பாதையில் அவர்கள் நடந்து சென்றனர்.

நீலன் சில மரங்களைக் கையால் காட்டி ''இந்த மரங்க பேரு புழுக்கப்பட்டை மரம். இந்த மரத்துப் பட்டைய யானை பிரியமா திங்கும். தும்பிக்கையாலே பட்டைய உறிச்சி தின்னதால தான் மரம் வெள்ளையா பளபளன்னு இருக்கு பாருங்க'' என்றான்.




அவர்கள் அருகில் சென்று பார்த்தனர்.

''இங்க பாருங்க, இந்த மரத்துல செம்மண் திட்டுகளும் கீறின கோடுகளும் இருக்கு. நல்லா பாருங்க''

''ஆமா நீலா ஏன் இப்படி இருக்கு?''

"புலி செம்மண் இடத்துல படுத்திருந்துவிட்டு இந்த மரத்துல வந்து உரசும்.



அதான் சிவப்புத் திட்டுகள். அடுத்து கால் நகங்க நல்லா கூர்மை ஆறதுக்கு இதுல நகங்கள தீட்டிவிடும். அதான் இப்படி கீறல்கள்."

ஒரு நீரோடை அருகே பாறையில் அமர்ந்து, கொண்டு வந்திருந்த சிற்றுண்டிப் பொட்டலங்களை அவிழ்த்துச் சாப்பிட்டனர்.

ஏதோ சத்தம் கேட்டதும் நீலன் ஓடிச்சென்று ஒரு பாறை மறைவில் இருந்து எட்டிப் பார்த்தான். இவர்களையும் சத்தமில்லாமல் அருகே வருமாறு அழைத்தான்.

இவர்கள் சென்று பாறை மேலிருந்து எட்டிப் பார்த்தனர். ஒரு கிடங்கில் விழுந்து கிடந்த குட்டி யானையைப் பெரிய யானை நீண்ட நேரமாகத் தும்பிக்கையால் தூக்க முயன்றும் முடியவில்லை. குட்டி யானையால் நிற்கவே முடியவில்லை. அது கிடங்கில் படுத்துக் கிடந்தது.

''அது அம்மா யானைங்க, குட்டி எப்படியோ கிடங்குல விழுந்திடுச்சி. கால்ல அடிபட்டிருக்கும் போல, அதால நிக்க முடியாம படுத்தே கிடக்கு. அது எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்தும் முடியாமல் போகவே குட்டியை அப்படியே விட்டு விட்டுப் போய்க் கொண்டிருந்தது.''

''என்னப்பா நீலா, அம்மா இப்படி விட்டுட்டுப் போகுது?''

''ஆமா சாமி, அதன் கூட்டத்தைக் கூட்டிட்டு வரும். எல்லாஞ் சேர்ந்து குட்டிய தூக்கப் பார்க்கும்''

''சரி, இப்ப நாம என்ன செய்யப்பா?''

''கொஞ்சம் பொறுங்க, யானை மறையட்டும். நாம போவோம்'' என்றவன், சிறிது நேரத்தில் அந்தக் கிடங்கு நோக்கிச் சென்றான். இவர்களும் கூடவே சென்றார்கள்.

''சாமி, சின்னக் குட்டிதான். நான் கிடங்குல குதிச்சு யானைக் குட்டிய தூக்கித் தர்றேன். நீங்க மெல்ல வாங்கி மேலே வைக்கணும்'' என்றான் நீலன்.

''சரிப்பா, அப்படியே செய்யலாம்'' என்றதும் நீலன் கிடங்கில் குதித்தான். யானைக் குட்டிய மெல்லத் தூக்கினான். கிடங்கில் கிடந்த ஒரு மரக்குச்சி, விழுந்த குட்டி யானையின் காலில் கிழித்து சதை தொங்கிக் கொண்டிருந்தது. ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவன் குட்டியைத் தலைக்கு மேல் தூக்கித்தர மேலேயிருந்த மாணவர்கள் யானைக் குட்டியை மெல்ல தூக்கித் தரையில் படுக்க வைத்தனர். மேலே ஏறி வந்த நீலன், ''நீங்க கொஞ்ச நேரம் இங்கேயே இருங்க. நான் போயி காயத்துல கட்ட பச்சிலை மூலிகைகளைப் பறிச்சிட்டு வர்றேன். யானை வர்றதுக்கு நேரமாகும். அதுக்குள்ளே நான் வந்துருவேன். பயப்படாம இருங்க'' நீலன் ஓடிச் சென்றான்.

மாணவர்கள் குட்டியைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர்.

''ஆர்த்தி, நாம ஏன் நீலன்

இவர்தான் அந்தப் பிரபலம்!



சீனத் தலைவர் மா சே துங்

- ஜி.எஸ்.எஸ்

வரும் வரை காத்திருக்கணும்? நீதான் எப்பவும் உன் பையில் ஃபர்ஸ்ட் எய்ட் பொருள்கள் வச்சிருப்பியே. ஏதாவது செய்யேன்.''

பூங்கோதை இவ்வாறு சொன்னதும் தன் பையை எடுத்தாள் ஆர்த்தி. யானைக்குட்டியின் காலை மெல்லத் தூக்கிப் பஞ்சால் காயத்தைத் துடைத்தாள். ஹைட்ரஜன் பெராக்சைடை பஞ்சில் நனைத்து காயத்தில் ஒற்றி எடுத்தாள்.

பின்னர் காயத்தில் போவிடோன் மருந்தைத் தடவினாள். பேண்டேஜ் துணியால் கட்டி, காலை மெல்ல மெல்ல வருடிவிட்டாள்.

''சரி, இப்ப தூக்கி நிறுத்துங்க'' என்றாள். அவர்கள் குட்டியைத் தூக்கி நிறுத்தியதும் அது மெல்ல தடுமாறியவாறே நின்றது.

அவர்கள் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தனர்.

ஓடிவந்த நீலன் குட்டி நின்றதைப் பார்த்து பிரமித்து நின்றான்.

''என்ன கால்ல கட்டு. யாரு போட்டா?''

''நம்ம ஆர்த்திதான் காயத்தைக் கழுவி துடைச்சி மருந்து வச்சி கட்டினாள்''

''பரவாயில்லம்மா கெட்டிக்காரப் பொண்ணுதான்'' என்றவன், சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

தூரத்தில் குட்டியானையின் தாய் யானை முதலிலும், மற்ற யானைகள் பின்னாலும் வந்து கொண்டிருந்தன. இவர்களைப் பார்த்ததும் யானைகள் நின்றன.

''என்னப்பா நீலா, யானைங்க வந்திருச்சே! இப்ப நாம என்ன செய்ய?''

''சாமி, மிருகங்களுக்கும் அறிவு இருக்கு. நாம அதுக்கு உதவி செய்யறதப் புரிஞ்சுதான் அங்கேயே இருக்கு. இல்லன்னா ஓடி வந்து நம்மள மிதிச்சுக் கொன்னுடும். சரி, வாங்க தள்ளிப் போய் நிற்போம். குட்டி அருகில் வந்த யானைகள் அதைச் சுற்றி நின்றன. தாய் யானை இவர்களைப் பார்த்து தும்பிக்கையால் சலாம் செய்வது போல் தூக்கிச் சத்தமிட்டது. அதன் கண்ணில் கண்ணீர் வடிந்தது.

அவர்கள் பெருமகிழ்ச்சியுடன் திரும்பி வந்தனர்.

ஓவியப் போட்டி


குளத்தில் பச்சை இலைகளுக்கு நடுவில் அழகாகப் பூத்திருக்கும் தாமரைகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: தாமரைக்குளம். படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.



கடைசித் தேதி : 5.08.2005

தனியே... தன்னந்தனியே...

மா. அழகுராஜன் சேகர்



ஒரு சமயம் களுக்கும் களுக்கும் சண்டை ஏற்பட்டது. அந்தச் சண்டையில் யார் பக்கம் சேர்ந்து கொள்ளலாம் என யோசித்தது. ஒரு நாள் நடந்த சண்டையின் போது வெற்றியடைவது போல் தோன்றியது. களின் தலைவனான டம் சென்று, "என்னையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றது. அதற்கு "நீ எங்கள் இனம் இல்லை" என்று மறுத்து விட்டது. உடனே "எனக்கும் இறக்கைகள் உள்ளதால் நானும் தான்" எனச் சொல்லி கழுகைச் சமாதானப்படுத்தி களின் படையில் சேர்ந்தது. அடுத்த நாள் சண்டையில் வெற்றி பெறும் என தெரிந்தது. களின் தலைவனான யிடம் சென்று "உங்களைப் போல் நானும் குட்டி போட்டு பால் கொடுக்கிறேன். களை ஒழித்துக் கட்ட என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்" என்று கெஞ்சிப் பேசி படையில் சேர்ந்தது. சில நாள் கழித்து நடந்த சண்டையில் வெற்றி பெறுவது போல் தெரிந்ததும், டம் சென்றது. லைத் திட்டி விரட்டி விட்டது. அன்றிலிருந்து, களுடனும் களுடனும் சேர முடியாமல், வெட்கத்தால் மறைந்தே வசித்து வருகிறது.

விம்பிள்டன் வென்றார் வீனஸ்!

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் லண்டனில் நடந்து முடிந்துள்ளன. ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர், அமெரிக்காவின்



• வீனஸ் வில்லியம்ஸ்



• மகேஸ் பூபதி - மேரி பியர்ஸ்

ரோடிக்கும் மோதினர். பரபரப்பான இறுதி ஆட்டத்தில் 6-2, 7-6 (7-2), 6-4 என்ற நேர்செட்களில் ரோடிக்கை வீழ்த்தி மீண்டும் பட்டத்தைக் கைப்பற்றினார் உலகின் நம்பர் ஒன் வீரர் ஃபெடரர்.

இந்தப் பட்டம் மூலம் விம்பிள் டனில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வென்று சாதனை படைத்திருக்கிறார் ஃபெடரர். அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ், பிஜோன் போர்க் ஆகியோரது வரிசையில் விம்பிள் டனில் தொடர்ந்து மூன்று முறை பட்டம் வென்றிருக்கிறார். 23 வயதாகும் ஃபெடரருக்கு இது ஐந்தாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத் தக்கது.

விம்பிள்டன்



• ரோஜர் ஃபெடரர்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஜூன் இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். சரியான விடையளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



பரிசு பெற்றவர்கள்:

1. சா. கிறிஸ்டி சஜிதா, நாகர்கோவில்
2. ஆர். விகாஸ் கிருஷ்ணன், மதுரை
3. வி.எஸ். கமல், சென்னை
4. எம். தேவிபாலா, தளவாய்புரம்
5. கே.ஆர். வளர்மதி, ஏற்றக்கோடு

சரியான விடை:


I. 1. சரி 2. முடியும் 3. ஆம் 4. இல்லை 5. கட்டாது.

II. 1. குங்குமப்பூ 2. அல்லி 3. தாமரை 4. துலிப் 5. ரோஜா 6. ராஃப்ப்ளேஷியா

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.


பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த வீனஸ் வில்லியம்ஸும் லின்ட்சே டேவன் போர்ட்டும் மோதினர். தரவரிசையில் 14வது இடத்திலிருந்த வீனஸ் உலகின் முதல் நிலை வீராங்கனையான லின்ட்சே டேவன் போர்ட்டை 4-6, 7-6, 9-7 என்ற செட்களில் கடுமையாகப் போராடி வீழ்த்தினார். வீனஸுக்கு இது மூன்றாவது விம்பிள்டன் பட்டம். இதற்கு முன் 2000 மற்றும் 2001ம் ஆண்டுகளில் இப்பட்டத்தை வென்றிருக்கிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாக சரியாக விளையாடாமல் இருந்த வீனஸ் விம்பிள்டனை வென்றுள்ளது எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. இவ்வெற்றி மூலம் வீனஸ் 4.5 கோடி ரூபாய் பரிசை வென்றார்.


விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் மகேஸ் பூபதி, ஃபிரான்ஸின் மேரி பியர்ஸ் ஆகியோர் ஆஸ்திரேலியாவின் பால் ஹான்லி, உக்ரைனின் ததியானா பெரிபியினிஸை 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வென்றனர். மூன்று ஆண்டுகளுக்குப் பின் பூபதி மீண்டும் விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பட்டத்தை வென்றுள்ளார். இந்தப் பட்டத்தோடு இதுவரை நான்கு முறை கலப்பு இரட்டையர் பிரிவில் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார் பூபதி. 4 முறை இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றுள்ளார்.


NEW PICTURE SERIAL
SHERLOCK SHANKAR HOLMES
CHENNAI Special
HARRY POTTER and the Half-Blood Prince
J.K.ROWLING
Interesting Features
Exciting Contests
Stories
GOKULAM
August 2005
Rs.8/-only
THE Magazine for Children
For Subscriptions Please Contact : Gokulam, Kalki Buildings, 47- NP,
Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 032.
Phone : 044-22251522 E-mail:subscription@kalkiweekly.com

தண்டனையும் பாராட்டும்!

கதை: வி.ஷியாமளா படம்: பிள்ளை




போருக்குப் பின் சந்தோஷத்துடன் திரும்பினார். அரண்மனையில் -
நான் தவறுதலாக சந்திரனுக்குத் தண்டனை அளித்து விட்டேன். அவனை அழைத்து வாருங்கள்.
சந்திரன் வீட்டில் -
அரசர் உன்னை அழைத்து வரச் சொன்னார்.
என்னைக் கொன்று விடாதீர்கள். விட்டு விடுங்கள்!
வீரர்கள் சந்திரனை இழுத்துச் சென்றனர்.
அரண்மனையில் அரசர் மன்னிப்புக் கேட்டு, பரிகாரம் செய்வதாகக் கூறினார்.
மன்னா, நீங்கள் என் முகத்தில் விழித்ததால் உங்களுக்கு வெற்றி கிடைத்தது; ஆனால் நான் உங்கள் முகத்தில் விழித்ததால் தண்டனை கிடைத்தது. இனிமேலாவது முகராசி பார்க்காதீர்கள். வருகிறேன்.

அன்புடன்...

ஒவ்வொரு மாதமும் புதுப் புது அறிவுபூர்வமான விளையாட்டுகளைத் தந்து அசத்துகிறீர்கள்! ஹாரி பாட்டர் போஸ்டர் சூப்பர்! சாக்ரடிஸின் 'மூன்று சல்லடைகளில் சலிக்க வேண்டும்' என்ற கொள்கை வெட்டி பேச்சாளர்களுக்கு ஒரு சவுக்கடி. பிள்ளைகள் - பெற்றோர்களுக்கு இடையிலான குழப்பத்திற்கு டாக்டரின் பக்குவமான அறிவுரை அற்புதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

- கார்த்திக் முத்துக்கிருஷ்ணன்,
நெய்வேலி



கோகுலம் படிக்கும் கிராமத்து வாசகி நான். எனது படைப்புகளை வெயிடமாட்டீர்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நான் திகைக்கும் அளவுக்கு எனது எழுத்துகளை இந்த மாதம் வெளியிட்டமைக்கும் மேலும் எனது எழுதும் ஆர்வத்தைத் தூண்டியதற்கும் நன்றிகள் பல.

- ஆ. கீதா,
வேலூர்

விறுவிறுப்பு மிகுந்த 'அம்மாவைத் தேடி' இவ்வளவு விரைவில் முடிந்திருப்பது அதிர்ச்சி! 'வாண்டுமாமா'வின் புதிய / பழைய மாயாஜாலக் கதைத் தொடர்களில் ஒன்றை வெளியிட்டு எங்கள் அதிர்ச்சியை இன்ப அதிர்ச்சியாக மாற்றுங்களேன்.

- இ.பு.ஞானப் பிரகாசன்,
மடிப்பாக்கம்

குழந்தைகளின் ஹீரோ 'ஹாரி பாட்ட'ரின் நடுப்பக்க வண்ணப்படம் எங்களை குதூகலப்படுத்திவிட்டது. பூமியிலிருந்து செவ்வாய் கிரகம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற ஜக்குவின் பதிலைக் கண்டு வியந்தேன்.

- டி.முருகேசன்,
திருவாரூர்

கண்ணாடி அணியும் சிறுவர்கள்

8 முதல் 10 வயதுள்ள பள்ளிக் குழந்தைகளில் 60% பேர் பார்வைக் குறைவுக்காக கண்ணாடி போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. குழந்தைகள் மணிக்கணக்கில் டீ.வி. பார்ப்பதும் கம்ப்யூட்டரில் விளையாடுவதும் இப்போது அதிகரித்து விட்டது. சமீபத்தில் எடுத்த சர்வேயில், டில்லியில் 60% குழந்தைகள் கண்பார்வைக்காக கண்ணாடி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

தாக்குதல் முறியடிப்பு!

உத்திரப் பிரதேசத்தில் உள்ள அயோத்தியில் 13 ஆண்டுகளுக்கு முன் பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்டது. சர்ச்சைக்குரிய அந்த இடத்துக்கு அருகே தாற்காலிக ராமர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் போல் நடித்து 6 தீவிரவாதிகள் ராமர் கோயிலைத் தகர்க்க முயற்சி செய்தனர். இந்த முயற்சி முறியடிக்கப்பட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் தாக்குதல்!

• அயோத்தி தாக்குதல்...





• லண்டன் தாக்குதல்...

குண்டு வெடிப்பு

2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை லண்டன் பெற்றுள்ளது. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்குள் லண்டனில் ஏழு இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. 50க்கும் மேற்பட்டோர் இச்சம்பவத்தின் மூலம் இறந்துள்ளனர்; ஆயிரக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்திருக்கின்றனர். ஜி-8 மாநாட்டுக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் பிரதமர் நிகழ்ச்சிகளை ரத்து செய்து விட்டு நாடு திரும்பினார்.

புற்றுநோய்க்குப் புது மருநது!

அன்னாசி பழத்தின் மூலக்கூறுகளுக்குப் புற்று நோயை எதிர்த்துப் போராடும் திறன் இருப்பதை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதன் மூலம் புற்றுநோய்க்கு புதுவித மருந்துகளை உருவாக்க வழி ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. வண்டு 2. வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை 3. சிவப்பு வண்ணத்துப் பூச்சி 4. மேகம் 5. பூச் செடியில் இலைகள் 6. தவளை 7. பூக்கள் 8. பெரிய பூவின் நிறம் 9. சூரியன் 10. வண்ணத்துப் பூச்சியின் உணர் கொம்பு.





பாம்! பாம்!
பீ...பீ... "ஆ!
ஐயோ...
விபத்து...
ஆம்புலன்ஸைக்
கூப்பிடுங்க
சீக்கிரம்!"

பல நேரங்களில் வாகன ஓட்டிகளும் சில நேரங்களில் தவறுதலாக நடந்து கொள்ளும் பாதசாரிகளும் இந்த விபத்துகளுக்குக் காரணமாகிறார்கள். பாதசாரிகள், வாகன ஓட்டிகள், குறிப்பாக குழந்தைகள்

சாலைப் பாதுகாப்பு

அடிப்படை சாலைப் பாதுகாப்பு விதிகளை அறிந்திருக்க வேண்டும்.

இதன் மூலம் பெருமளவில் விபத்துகளைத் தவிர்க்கலாம். பேருந்துக்காக காத்திருக்கும்போது நடு சாலையில் நிற்கக்கூடாது.

வாழைப் பழத்தோல் போன்ற தேவையற்ற பொருட்களைச் சாலையில் வீசக்கூடாது. சாலையைக் கடக்கும் முன் வல, இட புறங்களைப் பார்த்துக் கடக்க வேண்டும். சாலையைக் கடக்க ஜீப்ரா கிராசிங், பாலம், சுரங்கப்பாதை ஏதாவது இருந்தால் அதை மட்டுமே பயன்படுத்த வேண்டும். சிக்னலில் பச்சை விளக்கு எரியும்போது மெதுவாக சாலையைக் கடக்க வேண்டும்.

நேரம் முக்கியமானதுதான், அதைவிட உயிர் மிகவும் முக்கியமானது.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/ PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka